தீக்கதிர்

# ஒலிம்பிக் விளையாட்டுத் திருவிழா

# 2024

PARIS 2024

# ஒலிம்பிக் விளையாட்டுத் திருவிழா - 2024

தீக்கதிர்

guruleninn@gmail.com

**மின்னூல் வெளியீடு :**

**http://FreeTamilEbooks.com**

உரிமை - CC-BY-SA-NC கிரியேடிவ் காமென்ஸ். எல்லாரும் படிக்கலாம், பகிரலாம்.

பதிவிறக்கம் செய்ய - http://FreeTamilEbooks.com/ebooks/olympics_2024

அட்டைப்படம் - லெனின் குருசாமி - guruleninn@gmail.com

மின்னூலாக்கம் - ஐஸ்வர்யா லெனின் - aishushanmugam09@gmail.com

கணியம் அறக்கட்டளை

(kaniyam.com/foundation)

This Book was produced using LaTeX + Pandoc

## மின்னூல் வெளியீடு

மின்னூல் வெளியீட்டாளர்: http://freetamilebooks.com

அட்டைப்படம்: லெனின் குருசாமி - guru-leninn@gmail.com

மின்னூலாக்கம்: ஐஸ்வர்யா லெனின் - aishushanmugam09@gmail.com

மின்னூலாக்க செயற்திட்டம்: கணியம் அறக்கட்டளை - kaniyam.com/foundation

## Ebook Publication

Ebook Publisher: http://freetamilebooks.com

Cover Image: Lenin Gurusamy - guru-leninn@gmail.com

Ebook Creation: Iswarya Lenin - aishushan-mugam09@gmail.com

Ebook Project: Kaniyam Foundation - kaniyam.com/foundation

# பொருளடக்கம்


1. ஒலிம்பிக் விளையாட்டுத் திருவிழா - 2024 . . . . . . . . . . . . . . . . . . . 9
2. ஜூலை 26, 2024 . . . . . . . . . . . . . . 16
3. ஜூலை 28, 2024 . . . . . . . . . . . . . . 25
4. ஜூலை 29, 2024 . . . . . . . . . . . . . . 32
5. ஜூலை 30, 2024 . . . . . . . . . . . . . . 38
6. ஜூலை 31, 2024 . . . . . . . . . . . . . . 45
7. ஆகஸ்ட் 1, 2024 . . . . . . . . . . . . . . 52
8. ஆகஸ்ட் 2, 2024 . . . . . . . . . . . . . . 58
9. ஆகஸ்ட் 3, 2024 . . . . . . . . . . . . . . 66
10. ஆகஸ்ட் 4, 2024 . . . . . . . . . . . . . . 73
11. ஆகஸ்ட் 5, 2024 . . . . . . . . . . . . . . 80
12. ஆகஸ்ட் 6, 2024 . . . . . . . . . . . . . . 85
13. ஆகஸ்ட் 7, 2024 . . . . . . . . . . . . . . 90
14. ஆகஸ்ட் 8, 2024 . . . . . . . . . . . . . . 93
15. ஆகஸ்ட் 9, 2024 . . . . . . . . . . . . . . 100
16. ஆகஸ்ட் 10, 2024 . . . . . . . . . . . . . . 109

17. ஆகஸ்ட் 11, 2024 . . . . . . . . . . . . . . 115

கணியம் அறக்கட்டளை . . . . . . . . . . 122

# 1. ஒலிம்பிக் விளையாட்டுத் திருவிழா - 2024

ஜூலை 25, 2024

விளையாட்டு உலகின் முதன்மையான தொடராக இருப்பது ஒலிம்பிக் தொடராகும். 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் இந்த ஒலிம்பிக் தொடரை நடத்துவது மிகப்பெரிய கவுரவமான விசயம் என்ற நிலையில், ஒலிம்பிக் தொடரின் 33ஆவது சீசன் பிரான்ஸ் நாட்டின் தலைநகர் பாரீஸில் வெள்ளியன்று தொடங்குகிறது. ஆகஸ்ட் 11 வரை நடைபெறும் பாரீஸ் ஒலிம்பிக் தொடரில் 206 நாடுகளில் இருந்து மொத்தம் 10,714 வீரர் - வீராங்கனைகள் பங்கேற்கின்றனர். இவர்களுடன் பயிற்சியாளர், அணிக்குழுவினர் என 30,000

...

பேர் ஒலிம்பிக் தொடரில் சங்கமித்துள்ளனர்.

**வரலாற்றில் முதன்முறையாக...**

ஒலிம்பிக் வரலாற்றில் முதன்முறையாக பாரீஸ் ஒலிம்பிக் தொடரின் தொடக்க விழா தண்ணீரில் நடைபெறுகிறது. பாரீஸ் நகரின் முக்கிய அடையாளமான உலக புகழ்பெற்ற ஈபிள் டவர் அருகில் உள்ள செய்ன் நதியில் 3 லட்சம் பேர் முன்னிலையில் பிரமாண்ட தொடக்க விழா நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வீரர்கள், கலைஞர்கள் 162 படகுகள் மூலம் செய்ன் நதியில் அழைத்து வரப்படுகின்றனர். ஆற்றில் படகுகள் மூலம் வீரர்கள் சுமார் 6 கிலோ மீட்டர் தூரப்பாதையில் அழைத்து வரப்படுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**பிரெஞ்சு - பிரிட்டன் படைகள்**

பிரெஞ்சுப் படை என அழைக்கப்படும்

பிரான்ஸ் நாட்டின் காவல் மற்றும் ராணுவப்படைகளும், பிரிட்டன் படைகள் என அழைக்கப்படும் இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, வேல்ஸ், வடக்கு அயர்லாந்து ஆகிய நாடுகளின் காவல் மற்றும் ராணுவப்படைகளும் பாரீஸ் ஒலிம்பிக் தொடரின் பாதுகாப்பிற்கு களமிறங்கியுள்ளன. இதுபோக அமெரிக்கா, ஜெர்மனி, இஸ்ரேல், ஜப்பான், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளின் உளவுத்துறை அமைப்புகளும் பாரீஸ் ஒலிம்பிக் தொடரின் பாதுகாப்புக்காக பிரான்ஸ் நாட்டில் மையம் கொண்டுள்ளது.

**40,000 வகை உணவுகள்**

பாரீஸ் ஒலிம்பிக் தொடருக்காக பிரான்ஸ் அரசு பிரம்மாண்ட உணவு வழங்கும் திட்டத் தை கையில் எடுத்துள்ளது. உலகில் உள்ள 40,000 உணவுகளும் பாரீஸ் ஒலிம்பிக் கிராமத்தில் சமைக்கப்பட உள்ளன. சீனா, தென் கொரியா,

ஜப்பான் நாடுகளின் வீராங்கனைகளுக்காக கஞ்சி வகைகளையும் பிரான்ஸ் அரசு உணவு மெனுவில் சேர்த்துள் ளது. இதுபோக 30% உணவுகள் தாவர வகைகளை கொண்டதாக இருக்கும் என்றும், ஒரே நேரத்தில் 4000 வீரர்-வீராங்கனைகள் உணவு உண்ணலாம் என பாரீஸ் ஒலிம்பிக் மெஸ் நிர்வாகம் தனது அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**தமிழ்நாட்டிற்கு கவுரவம்...**

தொடக்க விழாவில் இந்திய தேசிய கொடியை ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற பேட்மிண்டன் வீராங்கனை பி.வி.சிந்து மற்றும் டேபிள் டென்னிஸ் உலகின் நட்சத்திர வீரருமான சரத் கமல் ஆகியோர் கையில் ஏந்தி செல்கின்றனர். இதில் சரத் கமல் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 329 விளையாட்டுகள்

பாரீஸ் ஒலிம்பிக் தொடரில் மொத்தம் 32 விளையாட்டுப் பிரிவுகள் அறிவிக்கபட்டுள்ள நிலையில், 32 பிரிவுகளில் இருந்து 329 போட்டி பிரிவுகள் நடத்தப்பட உள்ளது. இதில் சுவாரஸ்யமான விஷயம் என்ன வென்றால் 329 விளையாட்டுகளையும் 16 நாட்கள் நடத்தி முடிப்பது ஒலிம்பிக் போட்டியின் தனிப்பட்ட வரலாறு என்பது குறிப்பிடத்தக்கது.

## 24ஆம் தேதியே தொடங்கிவிட்டது

பாரீஸ் ஒலிம்பிக் தொடர் முறைப்படி ஜூலை 26 அன்று தொடங்கினாலும், 2 நாட்களுக்கு முன்கூட்டியே விளையாட்டுப் போட்டிகள் தொடங்கிவிட்டன. அதாவது ஜூலை 24 அன்று கால்பந்து, வில்வித்தை உள்ளிட்ட பெரிய விளையாட்டுகளின் போட்டிகள் தொடங்கிவிட்டன.

## இந்தியா - 112

பாரீஸ் ஒலிம்பிக் தொடரில் இந்தியா சார்பில் 112 வீரர் - வீராங்கனைகள் களமிறங்கியுள்ளனர். 112 வீரர் - வீராங்கனைகளும் 16 விளையாட்டுகளின் 69 பிரிவுகளில் பதக்க வேட்டை நிகழ்த்த உள்ளனர்.

# 2. ஜூலை 26, 2024

**பாரீஸ் ஒலிம்பிக் தொடரை சீர்குலைக்க சதி ரயில் தண்டவாளங்களை தகர்த்த மர்ம நபர்கள்**

உலகின் முதன்மையான விளையாட்டுத் தொடரான ஒலிம்பிக் தொடரின் 33ஆவது சீசன் பிரான்ஸ் நாட்டின் தலைநகர் பாரீஸில் வெள்ளியன்று நள்ளிரவு தொடங்கியது. தொடக்க விழாவிற்கு முன்னதாக வெள்ளியன்று காலை “கரே டு நார்ட்” ரயில் நிலையத்திற்கு அருகே ரயில் பாதையில் தண்டவாளங்களை தகர்த்தும், தண்டவாளங்களில் மரக் கட்டைகளை வைத்து தீ வைத்தும், அதி வேக ரயிலை கவிழ்க்கும் வேலையில் மர்ம நபர்கள் ஈடுபட்டுள்ளனர். ரயில் வரும் முன்னரே அந்நாட்டு ரயில்வே அதிகாரிகள் தண்டவாள






CHINA
5
TCL

...

தகர்ப்பு சதியை கண்டறிந்ததால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது. இந்த சம்பவம் காரணமாக பிரான்ஸ் நாட்டின் வடக்கு, கிழக்கு மற்றும் அட்லாண்டிக் பிராந்திய பகுதிகளில் ரயில் போக்குவரத்து லேசான அளவில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், ஒலிம்பிக் கிராமம் மற்றும் ஒலிம்பிக் போட்டி நடைபெறும் மினி பாரீஸ் நகரத்திற்கு செல்லும் மிக முக்கிய ரயில் பாதை யான பாரீஸ் - வில்லி இடையேயான அதி வேக ரயில் போக்குவரத்து முற்றிலும் முடங்கியுள்ளது. இதனால் தொடக்க விழாவிற்கு செல்ல முடியாமல் பிரான்ஸ் நாட்டின் உள்ளூர் ரசிகர்கள் கடும் இன்னலுக்கு ஆளாகியுள்ளனர்.

## ஒலிம்பிக் கிராமத்தில் பதற்றம்

ரயிலை கவிழ்க்க சதி செய்யப்பட்ட தகவல் ஒலிம்பிக் கிராமத்தில் தீயாய் பரவியது. இதனால் உள்ளூர், வெளிநாட்டு வீரர் -

வீராங்கனைகள் பதற்றத்தில் உள்ளனர். இதுபோக உக்ரைன் - ரஷ்யா, இஸ்ரேல் - பாலஸ்தீனம் ஆகிய நாடுகளின் போர் சம்பவங்களின் எதிரொலியால் பல்வேறு அசம்பாவிதங்கள் நிகழ வாய்ப்புள்ளது என பிரான்ஸ் உளவுத்துறை தகவல் தெரிவித்துள்ளதால் பாரீஸ் ஒலிம்பிக் கிராமம் பதற்றத்தில் ஆழ்ந்துள்ளது.

**பலத்த பாதுகாப்பு...**

ரயில் கவிழ்ப்பு சதி வேலையை செய்தவர்கள் யாரென்று தெரியவில்லை என பிரெஞ்சு ரயில்வே அதிகாரிகள் கூறியுள்ளனர். மேலும் இது தீவிரவாதிகளின் சதி இல்லை என்றும், உள்ளூர் மக்களின் போராட்டமாக இருக்கலாம் என மற்றொரு விசாரணை தகவலும் வெளியாகியுள்ளது. எனினும் உலக நாடுகளின் வீரர் - வீராங்கனைகள்,

அணிக்குழுவினர், அரசு சார்ந்த அதிகாரிகள் என லட்சக்கணக்கானோர் பாரீஸ் நகரில் குவிந்துள்ளதால், பிரெஞ்சு போலீஸ் படை அமெரிக்க உளவுத்துறை அமைப்புகளுடன் பாரீஸ் முழுவதும் பாதுகாப்பை தீவிரப்படுத்தியுள்ளது.

**அமெரிக்காவிற்கு ஆதரவாக சீன வீரர்- வீராங்கனைகளை குறிவைக்கும் ஊக்கமருந்து சோதனையாளர்கள்?**

விளையாட்டுப் போட்டிகளில் ஊக்கமருந்து சோதனை மிக முக்கியமானதாகும். ஊக்கமருந்து சர்ச்சையில் சிக்கினால் போட்டியில் ஆண்டுக்கணக்கில் பங்கேற்க முடியாத சூழல் ஏற்படும். போட்டி முடிந்த பின்பு ஊக்கமருந்து சோதனையில் சிக்கினால் வென்ற பதக்கங்கள் கூட பறிக்கப்படும். ஒலிம்பிக் போட்டிகளில் ஊக்கமருந்து சோதனை கட்டுப்பாடு

மிக மோசமான அளவில் இருக்கும். இதனால் விளையாட்டுப் போட்டிகளில் வீரர் - வீராங்கனைகளின் திறமையை விட ஊக்கமருந்து சோதனை மிக முக்கியமானதாக உள்ளது. இந்நிலையில், ஒவ்வொரு ஒலிம்பிக் தொடரில் பதக்க வேட்டை நிகழ்த்தும் சீன வீரர்- வீராங்கனைகளின் ஆதிக்கத்தை தகர்க்கும் முயற்சியில் பாரீஸ் ஒலிம்பிக் தொடரில் ஐரோப்பா - அமெரிக்காவின் கூட்டுச் சதி திட்டத்திற்காக ஊக்கமருந்து சோதனையாளர்களை பாரீஸ் ஒலிம்பிக் கமிட்டி களமிறக்கியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த தகவல் உண்மையானது என சீன நீச்சல் வீரர் கின் ஹையாங்கும் கூறியுள்ளார்.

ஜூலை 27, 2024

உலகின் முதன்மையான விளையாட்டுத்

தொடரான ஒலிம்பிக் தொடரின் 33ஆவது சீசன் பிரான்ஸ் நாட்டின் தலைநகர் பாரீஸில் இந்திய நேரப்படி வெள்ளியன்று நள்ளிரவு 11:30 மணிக்கு தொடங்கியது. 206 நாடுகளில் இருந்து 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீரர் - வீராங்கனைகள் கலந்து கொண்ட இந்த ஒலிம்பிக் தொடரின் தொடக்க விழா உலகின் முக்கிய சுற்றுலாத்தலமான ஈபிள் டவருக்கு அருகே பாயும் செயின் நதிக்கரையில் நடைபெற்றது. நாடுகளின் அணிவகுப்பு செயின் நதிக்கரையில் படகு மூலமாக நடைபெற்ற நிலையில், தொடர்ந்து சிறப்பு கலைநிகழ்ச்சிகள், லேசர் மின்விளக்கு கலை நிகழ்வுகள், சிறப்பு வாணவேடிக்கை என பிரம்மாண்ட ஏற்பாடுகளுடன் ஒலிம்பிக் திருவிழா தொடங்கிய நிலையில், பாரீஸ் விழாக்கோலம் பூண்டது. குறிப்பாக லேசர் தொழில்நுட்பத்தால் ஈபிள் டவர் வானவில்லை

போன்று ஜொலித்தது.

## சீனாவிற்கு முதல் தங்கம்

10 மீட்டர் ஏர் கலப்பு அணி பிரிவு இறுதி சுற்றில் சீனாவின் செங் - ஹுவாங் ஜோடியும், தென் கொரியாவின் கியூம் - பார்க் ஜோடியும் மோதின. தொடக்கம் முதலே பரபரப்பாக நடைபெற்ற இறுதிச் சுற்றில் 16-12 என்ற புள்ளிக்கணக்கில் சீனாவின் செங் - ஹுவாங் ஜோடி வெற்றி பெற்று அசத்தியது. இதன் மூலம் பாரீஸ் ஒலிம்பிக் தொடரின் முதல் தங்கப்பதக்கத்தை சீனா வென்ற நிலையில், தென் கொரியா முதல் வெள்ளிப்பதக்கத்தை வென்றது. மேலும் கஜகஸ்தான் - ஜெர்மனி ஆகிய நாடுகள் மோதிய வெண்கலப்பதக்கத்திற்கான ஆட்டத்தில், 17-5 என்ற புள்ளிக்கணக்கில் கஜகஸ்தான் வெற்றி பெற்று முதல் வெண்கலப்பதக்கத்தை வென்றது.

பொதுவாக ஒரு ஒலிம்பிக் தொடரில் முதல் தங்கப்பதக்கத்தை வெல்வது கவுரவமான விஷயம் என்ற நிலையில், கடந்த டோக்கியோ ஒலிம்பிக் தொடரைப் போல பாரீஸ் ஒலிம்பிக் தொடரிலும் முதல் தங்கப்பத க்கத்தை வென்று சாதனை படைத்துள்ளது சீனா.

**டைவிங்கிலும் சீனாவிற்கு தங்கம்...**

மகளிர் இரட்டையர் 3 மீ டைவிங் பிரிவில் சீனாவின் செங் - சென் ஜோடி 337.68 புள்ளிகளுடன் தங்கப்பதக்கம் வென்றது. 314.64 புள்ளிகளை பெற்று இரண்டாம் இடம் பிடித்த அமெரிக்காவின் சாரா - கூக் ஜோடி வெள்ளிப்பதக்கத்தையும், பிரிட்டனின் யாஸ்மின் - ஜென்சென் ஜோடி 302.28 புள்ளிகளுடன் வெண்கலப் பதக்கத்தையும் வென்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# 3. ஜூலை 28, 2024

**உலகின் முதன்மையான விளையாட்டுத் தொடரான ஒலிம்பிக் தொடரின் 33ஆவது சீசன் பிரான்ஸ் நாட்டின் தலைநகர் பாரீஸில் நடைபெற்று வருகிறது.**

**பி.வி.சிந்து அபாரம்**

பாரீஸ் ஒலிம்பிக் 2024 தொடரின் 2ஆம் நாளான ஞாயிறன்று பிற்பகல் 12;50 மணிக்கு பேட்மிண்டன் குரூப் சுற்று போட்டி நடைபெற்றது. இதில் மகளிருக்கான ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் நட்சத்திர வீராங்கனை பி.வி.சிந்து, மாலத்தீவைச் சேர்ந்த பாத்திமத் நபாஹா அப்துல் ரஸ்ஸாக்கை 21-19, 21-6 என்ற நேர் செட் கணக்கில் வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.


PARIS 2024



...

## தமிழ்நாடு வீராங்கனை இளவேனில் அதிர்ச்சி

மகளிர் 10 மீட்டர் ஏர் ரைபிள் துப்பாக்கி சுடுதல் தகுதிச் சுற்றில் இந்திய நட்சத்திர வீராங் கனை இளவேனில் (தமிழ் நாடு) தொடக்கத்தில் அருமையாக புள்ளி களை குவிதத்தாலும் இறுதிக்கட்ட சொதப்பலால், 630 புள்ளி களுடன் 10ஆவது இடத்தை பிடித்து இறுதிச் சுற்றுக்கான வாய்ப்பை இழந்தார். ஜூனியர் உலகக்கோப்பை தொடர்களில் எல்லாம் சாம்பியன் பட்டத்தை வென்ற இளவேனில் வாலறிவன் பாரீஸ் ஒலிம்பிக்கில் பதக்கம் வெல்வார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், தகுதிச் சுற்றோடு வெளியேறியது கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி யுள்ளது. இளவேனில் கடலூர் மாவட்டத்தை சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சீனா, அமெரிக்காவிற்கு கலக்கத்தை ஏற்படுத்திய ஆஸ்திரேலியா

கடந்த 10 ஒலிம்பிக் சீசன்களின் தொடக்கப் பதக்கப் பட்டியலில் சீனா, அமெரிக்கா, ஜப்பான், பிரிட்டன், ஜெர்மனி, தென் கொரியா ஆகிய 6 நாடுகளில் ஏதாவது ஒன்று முதலிடத்தில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்தும். இந்த 6 நாடுகளில் எதாவது ஒன்று ஒட்டுமொத்த சீசனிலும் கடைசி வரை ஆதிக்கம் செலுத்தி முதலிடத்தை தட்டிச் செல்லும். இதுதான் கடந்த 40 வருட நடைமுறையாக உள்ளது. ஆனால் தற்போது நடைபெற்று வரும் பாரீஸ் ஒலிம்பிக் தொடரில் முதன்முறையாக ஆஸ்திரேலியா நாடு முதல் இரண்டு நாட்கள் முதலிடத்தை பிடித்து அசத்தியுள்ளது. ஞாயிறன்று மாலை 4மணி நிலவரப்படி ஆஸ்திரேலியா நாடு 3 தங்கம், 2 வெள்ளி என 5 பதக்கங்களுடன்

முதலிடத்தில் இருந்தது. 3 தங்கம், ஒரு வெண்கலம் என 4 பதக்கங்களுடன் சீன இரண்டாவது இடத்திலும், ஒரு தங்கம், 2 வெள்ளி, 2 வெண்கலம் என 5 பதக்கங்களுடன் அமெரிக்கா 3ஆவது இடத்திலும் இருந்தது. யாரும் எதிர்பாராத வகையில் திடீரென ஆஸ்திரேலியா முதலிடத்தை பிடித்ததால் சீனா, அமெரிக்கா நாடுகள் கலக்கமடைந்தன.

**நீச்சலிலும் திடீர் ஆதிக்கம்**

பொதுவாக ஒலிம்பிக் நீச்சல் பிரிவில் அமெரிக்கா தான் ஆதிக்கம் செலுத்தும். ஆனால் பாரீஸ் ஒலிம்பிக் தொடரில் ஆஸ்திரேலியா நாடு பதக்க வேட்டை நிகழ்த்தி வருகிறது. ஞாயிறன்று அதிகாலை நடைபெற்ற மகளிர் 400 மீ பிரீஸ்டைல் பிரிவின் இறுதி சுற்றில் ஆஸ்திரேலியா வீராங்கனை டைட்மஸ் 3:57.49 நிமிடத்தில் முதலிடம் பிடித்து தங்கப்பதக்கம் வென்று அசத்தினார். 3:58.37

நிமிடத்தில் பந்தைய தூரத்தை கடந்து இரண்டாம் இடம் பிடித்த கனடாவின் சம்மர் வெள்ளிப்பதக்கத்தை யும், அமெரிக்காவின் கெய்தி 4:00.86 நிமிடத்தில் பந்தைய தூரத்தை கடந்து மூன்றாவது இடத்துடன் வெண்கலப் பதக்கத்தை யும் வென்றனர்.

**அணி பிரிவிலும் தங்கம்...**

அதே போல 400 மீ பிரீஸ்டைல் மகளிர் அணி (4x100) பிரிவில் ஆஸ்திரேலிய அணி 3:28.92 நிமிடத்தில் முதலிடத்தை பிடித்து தங்கப்பதக்கத்தை தட்டிச் சென்றது. அமெரிக்க அணி 3:30.20 நிமிடத்தில் பந்தய தூரத்தை கடந்து வெள்ளிப்பதக்கத்தையும், 3:30.30 நிமிடத்தில் மூன்றாவது இடத்தை பிடித்த சீன அணி வெண்கலப்பதக்கத்தை வென்றது.

**பதக்கப் பட்டியல்**

ஆஸ்திரேலியா

சீனா

அமெரிக்கா

பிரான்ஸ்

தென்கொரியா

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| | 3 | 2 | 0 | 5 |
| | 3 | 0 | 1 | 4 |
| | 1 | 2 | 2 | 5 |
| | 1 | 2 | 2 | 5 |
| | 1 | 1 | 1 | 3 |

**மாலை 4 மணி நிலவரம்**

## 4. ஜூலை 29, 2024

**உலகின் முதன்மையான விளையாட்டுத் தொடரான ஒலிம்பிக் தொடரின் 33ஆவது சீசன் பிரான்ஸ் நாட்டின் தலைநகர் பாரீஸில் நடைபெற்று வருகிறது.**

### மொத்த பதக்கத்தில் அமெரிக்கா ஆதிக்கம்

பாரீஸ் ஒலிம்பிக் தொடர் பதக்கப் பட்டியலின் முதல் 3 இடங்க ளில் ஜப்பான் (4 தங்கம், 2 வெள்ளி, 1 வெண்கலம் - மொத்தம் 7), தென் கொரியா (4 தங்கம், 2 வெள்ளி, 1 வெண்கலம் - மொத்தம் 7), ஆஸ்திரே லியா (4 தங்கம், 2 வெள்ளி - மொத்தம் 6) ஆகிய 3 நாடுகள் உள்ளன. இந்த 3 நாடுகளும் தங்கப்பதக்கத்தின் அடிப்ப டையில் முதல் 3 இடங்களில் உள்ள நிலையில், பதக்கப் பட்டியலில் 4 ஆவது இடத்தில் உள்ள


TEAM GB





...

அமெரிக்கா மொத்த பதக்க எண்ணிக்கையில் முத லிடத்தில் உள்ளது. அமெரிக்கா 3 தங்கம், 6 வெள்ளி, 3 வெண்கலம் என மொத்தம் 12 பதக்கங்களை வென்றுள் ளது. இன்னும் ஒன்றிரண்டு தங்கப்பதக் கத்தை மட்டும் வென்றால் அமெரிக் கா முதலிடத்திற்கு முன்னேறும் என்பது குறிப்பிடத்தக்கது.

**12 நாடுகளுக்கு தங்கம் தங்கப்பட்டியலில் இடம்பெறாத பிரிட்டன்**

பாரீஸ் ஒலிம்பிக் தொடரின் 3ஆவது நாளான திங்களன்று மாலை நிலவரப்படி ஜப்பான், தென் கொரியா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா, பிரான்ஸ், சீனா, இத்தாலி, கஜகஸ்தான், பெல்ஜியம், ஜெர்மனி, ஹாங்காங் (சீனா), உஸ்பெகிஸ்தான் ஆகிய 12 நாடுகள் தங்கப்பட்டியலில் இடம்பெற்றுள்ளன. ஆனால் ஒலிம்பிக்கில் ஆதிக்கம் செலுத்தும் முக்கிய நாடான பிரிட்டன் இன்னும்

தங்கப் பட்டியலில் இடம்பெற முடியா மல் தவியாய் தவித்து வருகிறது. திங்களன்று மாலை நிலவரப்படி பிரிட்டன் 2 வெள்ளி, 2 வெண்கலம் என 4 பதக்கங்களுடன் 13ஆவது இடத்தில் உள்ளது. பிரிட்டன் ஒரே நாடாக பங்கேற்கவில்லை. இங்கிலாந்து, ஸ்காட்லா ந்து, வேல்ஸ், வடக்கு அயர்லாந்து என 4 நாடுகளாக ஒன்றிணைந்து களமிறங்கியும் பிரிட்டன் தங்கப்பட்டியலில் இன்னும் இடம்பெறாமல் தவிப்பது ஆச்சர்யத்தை ஏற்படுத்தியுள்ளது.

**பாலியல் ரீதியிலான கருத்து ஒலிம்பிக் வர்ணனையாளர் டிஸ்மிஸ்**

மகளிர் 4x100 மீ ப்ரீஸ்டைல் நீச்சல் அணி பிரிவில் ஆஸ்திரேலிய நாடு தங்கப்பதக்கம் வென்றது. அப்போது ஒலிம்பிக் வர்ணனையாளர் குழுவில் இடம்பெற்ற பாப் பல்லார்ட் என்பவர் ஆஸ்திரேலிய

மகளிர் அணியை மறைமுகமாக குறிப்பிட்டு,“பெண்கள் எப்படிப்பட்டவர்கள் என்பது அனைவருக்கும் தெரியும். அங்கும் இங்கும் சுற்றித் திரிந்து, மேக்கப் செய்து தங்கள் வேலையையும் கச்சிதமாக செய்துவிடுகிறார்கள்” என பாலியல் ரீதியாக பேசினார். பாப் பல்லார்ட்டின் இந்த பேச்சிற்கு பிரிட்டன் ஒலிம்பிக் சங்க அதிகாரிகள் உட்பட பல்வேறு நாடுகளின் அதிகாரி கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், பெண்களுக்கு எதிராக இழிவான கருத் துக்களை தெரிவித்த பாப் பல்லார்ட் ஒலிம்பிக் வர்ணனையா ளர் டிஸ்மிஸ் செய்யப்படுவதாக பாரீஸ் ஒலிம்பிக் கமிட்டி அறிக்கை வெளியிட்டுள்ளது.

**பதக்கப் பட்டியல்**

**1 ஜப்பான்**

2 தென்கொரியா

3 ஆஸ்திரேலியா

4 அமெரிக்கா

5 பிரான்ஸ்

25 இந்தியா

| தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|
| 4 | 2 | 1 | 7 |
| 4 | 2 | 1 | 7 |
| 4 | 2 | 0 | 6 |
| 3 | 6 | 3 | 12 |
| 3 | 3 | 2 | 8 |
| 0 | 0 | 1 | 1 |

**(இந்தியா 25ஆவது இடத்தில் உள்ளது)**

# 5. ஜூலை 30, 2024

**உலகின் முதன்மையான விளையாட்டுத் தொடரான ஒலிம்பிக் தொடரின் 33ஆவது சீசன் பிரான்ஸ் நாட்டின் தலைநகர் பாரீஸில் நடைபெற்று வருகிறது.**

**இந்தியாவிற்கு 2ஆவது பதக்கம் மனு பாக்கர் - சரப்ஜோத் சிங் ஜோடிக்கு வெண்கலம்**

பாரீஸ் ஒலிம்பிக் தொடரில் இந்தியா சார்பில் 117 வீரர் - வீராங்கனைகள் பங்கேற்றுள்ள நிலையில், 3 நாட்களுக்கு முன்னர் மகளிர் 10 மீ ஏர் பிஸ்டல் பிரிவில் இந்திய வீராங்கனை மனு பாக்கர் (22) வெண்கலப்பதக்கம் வென்றார். பாரீஸ் ஒலிம்பிக்கில் இந்தியாவிற்கு இது முதல் பதக்கம் என்ற நிலையில், 4ஆவது நாளான செவ்வாயன்று இந்தியாவிற்கு மேலும் ஒரு



...

பதக்கம் கிடைத்துள்ளது. 10 மீ ஏர் பிஸ்டல் கலப்பு இரட்டை யர் துப்பாக்கி சுடுதலின் வெண்கலப் பதக்கத்திற்கான ஆட்டத்தில் இந்தியா வின் மனு பாக்கர் - சரப்ஜோத் சிங் ஜோடி, தென் கொரியாவின் லீ - ஜின் ஜோடியை எதிர்கொண்டது. தொடக் கம் முதலே ஆதிக்கம் செலுத்திய மனு பாக்கர் - சரப்ஜோத் சிங் ஜோடி 16-10 என்ற கணக்கில் வெற்றி பெற்று வெண்கலப்பதக்கம் வென்றது. இதன்மூலம் இந்தியாவின் பதக்க எண்ணிக்கை 2ஆக உயர்ந்துள்ளது. துப்பாக்கிச் சுடுதல் அணி பிரிவில் இந்தியா பதக்கம் வெல்வது இதுவே முதல்முறையாகும்.

**வரலாறு படைத்த விவசாயி மகன் சரப்ஜோத் சிங்**

பாரீஸ் ஒலிம்பிக்கில் மனு பாக்கருடன் இணைந்து வெண்கலம் வென்ற சரப்ஜோத் சிங் (22) ஹரியானா மாநிலத்தின் அம்பாலா

பகுதியைச் சேர்ந்தவர் ஆவார். சரப்ஜோத் சிங்கின் தந்தை ஜதீந்தர் சிங், தாயார் ஹர்தீப் கவுர் ஆகிய இருவரும் விவசாயம் செய்து வருகின்றனர். மிகவும் எளிமையான குடும்பத்தைச் சேர்ந்த சரப்ஜோத் சிங் சண்டிகரில் உள்ள டிஏவி கல்லூரியில் பட்டப்படிப்பை முடித்து, அபிஷேக் ராணா என்பவரிடம் முறையாக துப்பாக்கிச் சுடுதல் பயிற்சி பெற்று தற்போது ஒலிம்பிக்கில் பதக்க நாயகனாக உருவெடுத்துள்ளார்.

## ஒலிம்பிக் நீச்சல் தொடரும் இந்தியாவின் சோகம்

ஒலிம்பிக் விளையாட்டில் மிக முக்கியமான பிரிவு நீச்சல் ஆகும். இந்த பிரிவில் பதக்கம் வெல்வது பெருமைக்குரிய விஷயம் என்ற நிலையில், நீச்சல் பிரிவில் பதக் கம் வெல்வதற்கு தனி கிளைமேக்ஸ் பேச்சு வழக்கும் நிலுவையில்உள்ளது.

அதுயாதெனில் ஒலிம்பிக் நீச்சலில் பதக்கம் வென்ற நாடு அதிக கடற் பரப்பை கொண்ட அல்லது அதிக கால்வாய் கொண்ட பகுதியாக இருப்ப தால் அவர்கள் பதக்கம்வெல்கிறார்கள் என பதக்கம் வெல்லாதநாடுகள் கூறுவதுண்டு. இந்தகூற்று சமாளிக்கும் வாதம் என்றாலும், உண்மையில் நீர்நிலைகள் அதிகம் கொண்ட நாடு கள்தான் ஒலிம்பிக் நீச்சலில் வரலாறு படைத்துவருகின்றன. அமெரிக்கா, ஆஸ் திரேலியா, சீனா, ஜப்பான், தென் கொரியா, இத்தாலி, பிரான்ஸ், பிரேசில் போன்ற அதிக கடற்பரப்பை கொண்ட நாடுகள் ஓலிம்பிக் நீச்சலில் இன்று வரை தொடர்ச்சியாக சாதித்து வருகிறார்கள். மேற்குறிப்பிட்ட 8 நாடுகளை போல உலகின் மிகப்பெரிய நீர் நிலைகளை கொண்ட நாடாக உள்ள இந்தியா மட்டும் ஒலிம்பிக் நீச்சலில் சோபிக்காமல் “வந் தோம் போனோம்” என்றே உள்ளது. இந்தியாவில்

வங்காள விரிகுடா, அரபிக்கடல், இந்திய பெருங்கடல் என 3 பெரிய கடல்கள் உள்ளன. தாமிரபரணி முதல் கங்கை வரை 50க்கும் மேற் பட்ட மிகப்பெரிய ஆறுகள், நதிகளும், குட்டிக் கடல் போன்ற குளங்களும், கண்மாய்களும் உள்ளன. இத்தகைய பிரம்மாண்ட நீர் நிலை வசதிகள் இருந்தாலும் இந்தியர்கள் ஒலிம்பிக் நீச்சலில் சாதிக்காமல் இருப்பது சோகத்தை ஏற்படுத்துகிறது. தற்போது நடைபெற்று வரும் பாரீஸ் ஒலிம்பிக் தொடரில் இந்திய வீரர் - வீராங்கனைகள் தொடக்க சுற்றி லேயே (ஹீட்) வெளியேறியுள்ளனர். எப்பொழுது தான் இந்த நிலை மாறும் என தெரியவில்லை.

## பாரீஸ் சென்றது இந்திய தடகள அணி

பொதுவாக ஒலிம்பிக் தொடரில் தடகளம் கடைசி நிகழ்வாக இருக்கும் நிலையில், உலக நாடுகள் ஒலிம்பிக் போட்டி நடைபெறும் நாட்டிற்கு தங்களது தடகள அணியை

தாமதமாகவே அனுப்பும். அதன்படி இந்திய ஒலிம்பிக் சங்கம் செவ்வாயன்று அதிகாலை தனது தடகள அணியை பாரீஸ் நகருக்கு அனுப்பி வைத்தது. இந்திய தடகள அணியினர் செவ்வாயன்று பிற்பகல் பாரீஸ் நகரை சென்றடைந்தனர்.

# 6. ஜூலை 31, 2024

## இந்திய நட்சத்திரங்கள் முன்னேற்றம்

### பி.வி.சிந்து - பேட்மிண்டன்

மகளிர் பேட்மிண்டன் ஒற்றையர் பிரிவு ரவுண்ட் சுற்று ஆட்டத்தில் இந்திய வீராங்கனை சிந்து, எஸ்டோ னிய வீராங்கனை கிறிஸ்டின் குபாவை எதிர்கொண்டார். தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய பி.வி.சிந்து 21-5, 21-10 ஆகிய நேர் செட் கணக்கில் எளிதாக வெற்றி பெற்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதி பெற்றார்.

### லக்சயா சென் - பேட்மிண்டன்

இந்திய வீரர் லக்சயா சென், உலகத்தரவரிசையில் 4ஆவது இடத்தில் இருக்கும் இந்தோனேஷிய வீரர் ஜோனதன் கிறிஸ்டியை எதிர்கொண்டார். 22 வயதான





...

லக்சயா சென், தொடக்கத்தில் சில மோசமான ஷாட்டுகள் மூலம் எதிரணிக்கு புள்ளிகளை தாரை வார்த்தார். இதனால் அவர் தோல்வியை தழுவுவார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், முதல் செட்டின் நடுப்பகுதியில் சுதாரித்து விளையாட ஆரம்பித்த லக்சயா சென் அதிரடி ஸ்மாஷ் ஷாட்டுகளுடன் 21- 18, 21-12 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதி பெற்றார்.

## ஸ்வப்னில் குசலே - துப்பாக்கிச் சுடுதல்

ஆடவர் 50 மீட்டர் ஏர் ரைபிள் துப்பாக்கிச் சுடுதல் பிரிவில் இந்திய வீரரும், ஆசிய சாம்பியனான ஸ்வப்னில் குசலே 12 சுற்று முடிவில் 197 புள்ளிகளை குவித்து இறுதி சுற்றுக்கு முன்னேறி அசத்தியுள்ளார். இந்த வெற்றியின் மூலம் ஒலிம்பிக் வரலாற்றில் 50 மீட்டர் ஏர் ரைபிள் துப்பாக்கிச் சுடுதலில்

இறுதிப் போட்டிக்கு முன்னே றிய முதல் இந்திய வீரர் என்ற சிறப்புக்கு ஸ்வப்னில் குசலே சொந்தக்காரர் ஆனார்.

### லவ்லினா போர்ஹகைன் - குத்துச்சண்டை

மகளிர் குத்துச்சண்டை 75 கிலோ பிரிவில் இந்திய வீராங்கனை லவ்லினா போர்ஹகைன், நார்வேயை சேர்ந்த சன்னிவா ஹாப்ஸ்டாட் என்பவரை எதிர்கொண்டார். முதல் படிகளில் இருவரும் சமநிலையில் இருந்த நிலையில், அடுத்தடுத்த சுற்றுகளில் லவ்லினா சரமாரி குத்துகளை விட்டு சன்னிவாவை திணறடித்தார். இறுதியில் 5-0 என்ற புள்ளிக் கணக்கில் லவ்லினா வெற்றி பெற்று கால் இறுதி சுற்றுக்கு தகுதி பெற்றார். கால் இறுதியில் லவ்லினா சீனாவை சேர்ந்த லி கியான் என்பவரை எதிர்கொள்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## முதலிடத்திற்கு முன்னேறிய சீனா

பாரீஸ் ஒலிம்பிக் தொடரில் முதல் 4 நாட்களாக மந்தமான நிலையில் பதக்கங்களை வென்று வந்த சீனா மீண்டும் முதலிடத்திற்கு முன்னேறியுள்ளது. பாரீஸ் ஒலிம்பிக் தொடரின் 5ஆம் நாளான புதனன்று மாலை 6 மணி நிலவரப்படி சீனா 8 தங்கம், 6 வெள்ளி, 2 வெண்கலம் என 16 இடங்களுடன் முதலிடத்திற்கு முன்னே றியது. ஜப்பான் 7 தங்கம், 2 வெள்ளி, 4 வெண்கலம் என 13 பதக்கங்களுடன் இரண்டா வது இடத்திலும், ஒலிம்பிக் போட்டியை நடத்தும் பிரான்ஸ் நாடு 6 தங்கம், 9 வெள்ளி, 5 வெண்கலம் என 20 பதக்கங்களுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளன.

## பாரீஸ் ஒலிம்பிக்கில் ரஷ்யா, பெலாரஸ்

உக்ரைன் மீதான ராணுவ நடவடிக்கையின்

காரண மாக ரஷ்யா ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொள்ள தடை விதிக்கப் பட்டுள்ளது. அதே போல உக்ரைன் போரில் ரஷ்யாவுக்கு உதவி செய்ததாக கூறி பெலாரஸ் நாட்டிற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. எனினும் நல்லெண்ண நடவடிக்கையாக ரஷ்யா சார்பில் 36 பேரும், பெலாரஸ் சார்பில் 24 பேரும் பாரீஸ் ஒலிம்பிக்கில் கலந்து கொள்ள சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி அழைப்பு விடுத்து இருந்தது. இந்த அழைப்பை ஏற்றுக்கொண்ட ரஷ்யா, பெலாரஸ் நாடுகள் குறிப்பிட்ட வீரர் - வீராங் கனைகளை மட்டும் பாரீஸ் ஒலிம்பிக் களத்திற்கு அனுப்பி வைத்துள்ளது. பாரீஸ் ஒலிம்பிக்கில் ரஷ்யா சார்பில் 15 பேரும், பெலாரஸ் சார்பில் 17 பேரும் என மொத்தம் 32 வீரர்-வீராங்கனை கள் மட்டுமே கலந்து கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**இஸ்ரேலுக்கு தடையில்லை**

உக்ரைன் மீதான ராணுவ நடவடிக்கையால் ரஷ்யா, பெலாரஸ் நாடுகளுக்கு சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி தடை விதித்துள்ள நிலை யில், பாலஸ்தீனத்தின் மீது இஸ்ரேல் போர் தொடுத்த போதிலும் அந்நாட்டிற்கு தடை விதிக்காமல் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி அனு மதித்து உள்ளது பல்வேறு சர்ச்சைகளை கிளப்பி உள்ளது. பாலஸ்தீனத்தின் மீது போர் தொடுத்துள்ள இஸ்ரேல், சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் ஒப்பந்தங்கள், விதிமுறைகளை மீறாத தால் அனுமதி மறுக்கப்படவில்லை என சர்ச்சைக்குரிய விளக்கமும் அளிக்கப்பட்டுள்ளது.

# 7. ஆகஸ்ட் 1, 2024

**உலகின் முதன்மையான விளையாட்டுத் தொடரான ஒலிம்பிக் தொடரின் 33ஆவது சீசன் பிரான்ஸ் நாட்டின் தலைநகர் பாரீஸில் நடைபெற்று வருகிறது.**

**இந்தியாவிற்கு மேலும் ஒரு பதக்கம் ஸ்வப்னில் குசலே வெண்கலம் வென்றார்**

ஆடவர் 50 மீட்டர் ரைபிள் 3 நிலை (ஷாட்) துப்பாக்கிச்சுடுதல் பிரிவில் இந்திய வீரர் ஸ்வப்னில் குசலே இறுதிச் சுற்றுக்கு முன்னேறினார். தொடர்ந்து வியாழனன்று நடைபெற்ற இறுதிச் சுற்றில் ஸ்வப்னில் குசலே தொடக்கத்தில் 6 நிலைகளை (2 சுற்று) அபாரமாக சுட்டு வீழ்த்தினார். ஆனால் நடுக்கட்டத்தில் பார்ம் இழந்த ஸ்வப்னில் குசலே சற்று தடுமாறிய நிலையில், புள்ளிகள்



...

குவிக்க முடியாமல் அவர் திணறினார். சீன வீரர் லியு, உக்ரைன் வீரர் கிலீஷ் ஆகியோர் துடிப்பான ஆட்டத்தை வெளிப் படுத்த ஸ்வப்னில் குசலே 451.4 புள்ளி களுடன் மூன்றாவது இடத்துடன் வெளியேற்றப்பட்டார். இறுதியில் சீன வீரர் லியு 463.6 புள்ளிகளுடன் தங்கப்பதக்கதை யும், உக்ரைன் வீரர் கிலீஷ் 461.3 புள்ளிகளுடன் வெள்ளிப்பதக்கத்தை யும், இந்திய வீரர் ஸ்வப்னில் குசலே 451.4 புள்ளிகளுடன் வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர். இதன் மூலம் பாரீஸ் ஒலிம்பிக் தொடரில் இந்தி யாவின் பதக்க எண்ணிக்கை 3 ஆக (மூன்றும் வெண்கலம்உயர்ந்துள்ளது.

**தங்கம் வென்று வரலாறு படைத்த குட்டி நாடான கவுதமாலா**

மத்திய அமெரிக்காவில் உள்ள குட்டி நாடான கவுதமாலாவில் வெறும் ஒன்றரை கோடி அளவில் மக்கள் வசித்து வருகின்றனர்.

ஒலிம்பிக் தொடரில் கவுதமாலா நாடு பதக்கப்பட்டியலில் இடம்பெறுவது அரிதான விஷயம் என்ற நிலையில், பாரீஸ் ஒலிம்பிக் தொடரில் ஒரு தங்கம், ஒரு வெண்கலம் அடுத்தடுத்து இரண்டு பதக்கங்களை வென்று, ஒலிம்பிக் தொடரில் தனக்கென்று புதிய வரலாறு படைத்துள்ளது. எனினும் கவுதமாலா நாடு இப்பொழுது மட்டும் ஒலிம்பிக்கில் பதக்கம் வெல்லவில்லை. ஏற்கெனவே கடந்த 2021 லண்டன் (இங்கிலாந்து) ஒலிம்பிக் தொடரில் வெள்ளி வென்றது என்பது குறிப்பிடத்தக்கது.

**ஒலிம்பிக் அரங்கத்தை அதிர வைத்த துருக்கி வீரர்**

பாரீஸ் ஒலிம்பிக் தொடரில் 10 மீ ஏர் பிஸ்டல் கலப்பு இரட்டையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் செர்பியா - துருக்கி நாடு கள் மோதின. தொடக்கம் முதலே

பரபரப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் செர்பியா 16-14 என்ற புள்ளிக்கணக்கில் வெற்றி பெற்று தங்கப்பதக்கத்தை தட்டிச் சென்றது. துருக்கி அணி தோல்வி கண்டு வெள்ளிப்பதக்கம் வென்றாலும், துருக்கி அணியில் விளையாடிய யூசப் டிகெக், தனது பயமரியா செயல்பாடு மூலம் பாரீஸ் ஒலிம்பிக் அரங்கத்தை நடுங்க விட்டுள்ளார். வேற லெவல்... துப்பாக்கிச் சுடுதல் போட்டியில் கலந்து கொள்ள வேண்டும் என்றால் சிறப்பு லென்ஸ் (கண்ணிற்கு), பெரிய காதுறை, கைகள் நடுங்காமல் இருக்க பெல்ட் போன்றவற்றை அணிவார்கள். இதுபோக துப்பாக்கி குண்டு துளைக் காத படி கவச உடை ஒன்றும் அணிவார் கள். துப்பாக்கிச் சுடுதல் போட்டியில் பங்குபெற வேண்டுமானால் இவ்வ ளவு பாதுகாப்பு அம்சங்களை கடைப் பிடிக்க வேண்டிய சூழல் உள்ளது. ஆனால்

துருக்கி வீரர் யூசப் டிகெக் எவ்வித பாதுகாப்பு கவசங்களும் அணியாமல் வழக்கமாக அணியும் கண்ணாடியுடன், சாதாரண டி-சார்ட் அணிந்து துப்பாக்கிச் சுடுதலில் மிரட்டினார். இதில் சுவாரஸ்யமான விஷயம் என்றால் எவ்வித பதற்றம் இல்லாமல் ஒரு கையை பேண்ட் பாக்கெட்டில் வைத்துக்கொண்டு மிக சாதாரணமாக துப்பாக்கிச்சூடு நடத்தியது பாரீஸ் அரங்கத்தில் பலத்த பாராட்டுகளை பெற்றது.

## 8. ஆகஸ்ட் 2, 2024

**மனு பாக்கர் மீண்டும் அசத்தல் 25 மீ பிஸ்டல் பிரிவில் இறுதிச் சுற்றுக்கு முன்னேற்றம்**

பாரிஸ் ஒலிம்பிக்கில் இந்திய வீரர் - வீராங்கனைகள் அடுத்தடுத்து சொதப்பி, தொடரை விட்டு வெளியேறி வரும் நிலையில், துப்பாக்கிச் சுடுதல் பிரிவு வீராங்கனையான மனு பாக்கர் மட்டும் நாட்டின் பெருமைக்காக தனி ஒருவராக போராடி வருகிறார்.

இந்த போராட்டத்தின் பலனாக 10 மீ ஏர் பிஸ்டல் மற்றும் 10 மீ ஏர் பிஸ்டல் கலப்பு இரட்டையர் பிரிவில் வெண்கலப்பதக்கம் வென்ற மனு பாக்கர், வெள்ளியன்று 25 மீ பிஸ்டல் பிரிவிலும் இறுதிச் சுற்றுக்கு முன்னேறி யுள்ளார். 25 மீ பிஸ்டல்



...

பிரிவிற்கான இறுதிச் சுற்று ஆட்டம் இந்திய நேரப்படி சனியன்று மதியம் 1 மணிக்கு மேல் நடைபெறுகிறது. இந்த பிரிவி லும் பதக்கம் வெல்லும் பட்சத்தில் ஒரே ஒலிம்பிக் தொடரில் ஹாட்ரிக் பதக்கம் வென்ற ஒரே வீராங்கனை என்ற வரலாற்றுச் சாதனையை மனு பாக்கர் படைப்பார். தற்பொழுதே ஒரே ஒலிம்பிக் தொடரில் இரண்டு பதக்கம் வென்ற இந்தியர் என்ற பெருமை மனு பாக்கர் கைவசம் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**வாள்வீச்சில் மிரட்டிய 7 மாத கர்ப்பிணி பாரீஸ் ஒலிம்பிக்கில் கவனத்தை ஈர்த்த எகிப்து பெண்**

எகிப்து நாட்டைச் சேர்ந்த நடா ஹபிஸ் (26) என்ற பெண் பென்சிங் (வாள்வீச்சு) பிரிவின் முதல் சுற்றில் அமெரிக்க வீராங்கனை எலிசபத்தை 15-13 என்ற புள்ளிக்கணக்கில் வீழ்த்தி, காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு

(நாக்-அவுட்) தகுதி பெற்றார். ஆனால் நாக் அவுட் சுற்றில் தென்கொரியா வீராங் கனை ஜியோனிடம் தோல்வியை தழுவி நடா ஹபிஸ் தொடரிலிருந்து வெளி யேறினார்.

பாரீஸ் ஒலிம்பிக்கில் இருந்து வெளி யேறிய பொழுது நடா ஹபிஸ் ஒரு செய்தியை வெளியிட்டார். அந்த செய்தி உலகம் முழுவதும் அதிர்ச்சி கலந்த ஆச்சர்யத்தை ஏற்படுத்தியுள்ளது. நடா ஹபிஸ் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் கூறுகையில், “மூன்று முறை ஒலிம்பிக்கில் பங்கேற்று விளையாடி யிருக்கிறேன். ஆனால் இது என் வாழ் நாளில் மறக்க முடியாத ஒலிம்பிக்ஸ் ஆகும். இந்த ஒலிம்பிக்ஸ் களத்தில் நானும், என் எதிரணி வீராங்கனை மட்டும் விளையாடவில்லை. மூன்றாவ தாக ஒரு சிறிய ஒலிம்பிக் நட்சத்திரமும் என்னுடன் இருந்தார். ஆம், இந்த உல கத்தைக் காண

காத்திருக்கும் என் குழந்தையும் என்னுடன் களத்தில் இருந்தார். நானும் என் குழந்தையும் சேர்ந்து களத்தில் வாள் வீசினோம். இதற்காக இருவரும் உடல்ரீதியாக வும், மன ரீதியாகவும் நிறைய சவால் களை எதிர்கொண்டோம். கர்ப்ப காலம் என்பது கடினமானதுதான். ஆனால் குடும்பத்தையும், கனவை யும் ஒருசேர சுமப்பது அதைவிடவும் கடினமானது. சாதிப்பதற்கு இது போன்ற சவால்களை எதிர்கொள்ளத் தான் வேண்டும் என்றாலும், இது சுக மான வலிதான். இந்தச் சூழலிலும் நான் ஒலிம்பிக்கில் பங்கேற்க எனக்கு உறு துணையாக இருந்தார் என் கணவர். என் குடும்பமும் எனக்கு உறுதுணை யாக நின்றது. அந்த வகையில் நான் மிகவும் அதிர்ஷ்டசாலி என்று நினைக்கிறேன். நான் கர்ப்பிணியாக விளையாட எனது கணவர் முழு ஆதரவை வழங்கினார். அவர் வைத்த நம்பிக்கையால்

தான் இந்த அளவிற்கு என்னால் வர முடிந்தது" என்று பதிவிட்டிருக்கிறார்.

பாரீஸ் ஒலிம்பிக் போட்டியில் பல்வேறு சுவாரஸ்ய சம்பவங்கள் அரங்கேறி வரும் நிலையில், எகிப்து நாட்டைச் சேர்ந்த 7 மாத கர்ப்பிணி பெண் ஒருவர் கடினமான, ஆபத்தான வாள்வீச்சு பிரிவில் கலந்து கொண்டு நாக் - அவுட் சுற்று வரை முன்னேறி யுள்ள சம்பவம் ஆச்சர்யம் கலந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

**பதக்க வாய்ப்பு பறிபோனது : பி.வி.சிந்து அதிர்ச்சி தோல்வி**

பாரீஸ் ஒலிம்பிக் தொடரின் 7ஆவது நாளான வெள்ளியன்று நடைபெற்ற பேட்மிண்டன் மகளிர் ஒற்றையர் பிரிவு நாக் அவுட் (ரவுண்டு - 16) சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் பி.வி.சிந்து - சீனாவின்

ஹீ பிங்ஜியா ஆகியோர் மோதினர். தொடக்க சர்வீஸ் முதலே ஆக்ரோஷமான ஆட்டத்தை சீனாவின் ஹீ பிங்ஜியா முதல் செட்டை 21-19 என்ற கணக்கில் கைப்பற்றி னார். இரண்டாவது செட்டை கைப்பற்றி பி.வி.சிந்து பதிலடி கொடுப்பார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ஹீ பிங்ஜியா அதிரடி ஷாட்களை தேவைக்கேற்ப பயன்படுத்தி மற்ற நேரங்களில் டிராப் ஷாட் மூலம் பி.வி.சிந்துவை திணறடித்தார். இறுதியில் 2ஆவது செட்டையும் சீனாவின் ஹீ பிங்ஜியா கைப்பற்றி காலிறுதி சுற்றுக்கு முன்னேற, பி.வி.சிந்து அதிர்ச்சி தோல்வியுடன் வெளியேறினார். 2016 ரியோ மற்றும் 2020 டோக்கியோ ஒலிம்பிக் சீசனில் வெள்ளி மற்றும் வெண்கலம் வென்ற பி.வி.சிந்து இம்முறையும் பதக்கம் வென்று நாட்டிற்கு பெருமை சேர்ப்பார் என எதிர்பார்க்கப்பட்ட

நிலையில், நாக் அவுட் சுற்றோடு பி.வி.சிந்து வெளியேறியது இந்திய ரசிகர்களுக்கு கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# 9. ஆகஸ்ட் 3, 2024

**நூலிழையில் பதக்கத்தை இழந்த மனுபாக்கர்**

பாரீஸ் ஒலிம்பிக் தொடரில் இந்தியா இதுவரை 3 வெண்கலப்பதக்கம் வென்றுள்ளது. 3 பதக்கமும் துப்பாக்கிசூடுதலில் இருந்து கிடைத்துள்ள நிலையில், இதில் 2 பதக்கம் (மகளிர் 10 மீ ஏர் பிஸ்டல் தனிநபர் மற்றும் 10 மீ ஏர் பிஸ்டல் கலப்பு இரட்டையர் பிரிவில்) மனுபாக்கர் மூலம் கிடைத்தது. தொடர்ந்து 25 மீ ஏர் பிஸ்டல் பிரிவிலும் மனுபாக்கர் இறுதிச் சுற்றிற்கு முன் னேறிய நிலையில், இந்தியாவின் பதக்க எண்ணிக்கை 4ஆக உயரும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் சனியன்று மதியம் நடைபெற்ற இறு திச்சுற்றில் கடுமையான போராட்டத்து டன் நூலிழையில்




NT DE L'ATHL
THLETE MOM



...

பதக்க வாய்ப்பை இழந்து நான்காம் இடம் பிடித்தார் மனுபாக்கர்.

### கதறி அழுத மனுபாக்கர்

போட்டி முடிந்த பிறகு கண்ணீ ரோடு மனம் வருந்தி பேசிய மனு பாக்கர், “இறுதிப்போட்டியில் மிகவும் பதற்றமாக இருந்தேன். களம் எனக்கு சாதகமாக அமையவில்லை. என்னு டைய சிறப்பான செயல்பாட்டைக் கொடுக்கவே முயன்றேன். இரண்டு பதக்கங்களை வென்றதில் மகிழ்ச்சி. ஆனால், இந்த நான்காவது இடத்தை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இன்றைக்குதான் மதிய உணவை அருந்தப் போகிறேன். இங்கே இத்த னை நாட்களாகக் காலை உணவை அருந்திவிட்டு பயிற்சிக்கு வந்துவிடு வேன். மாலைதான் திரும்புவேன். அத னால் இன்றைக்குதான் போட்டிக ளெல்லாம் முடிந்துவிட்டதால் மதிய உணவை

எடுத்துக்கொள்ளப் போகி றேன்” எனக் கூறினார்.

**ஒலிம்பிக் பதக்க மேடையில் மலர்ந்த காதல் உலகளவில் டிரெண்ட் ஆகும் சீனர்களின் வீடியோ**

விளையாட்டு உலகில் அதிரடி ஆட்டம், சாதனை, வேதனை உள்ளிட்ட சம்பவங்களுக்கு இடையே இளசுகளின் காதல் தொடர்பான சுவா ரஸ்ய சம்பவங்களும் அரங்கேறும் என்ற நிலையில், பாரீஸ் ஒலிம்பிக் தொடரில் சீன வீரர் - வீராங்கனைகள் ஒலிம்பிக் பதக்க மேடையில் காதலை பரிமாறிக் கொண்ட சம்பவம் ஒன்று அரங்கேறியுள்ளது.

பேட்மிண்டன் கலப்பு இரட்டையர் பிரிவின் இறுதிச் சுற்றில் சீனாவைச் சேர்ந்த ஹுவாங் - செங் ஜோடி தென் கொரியா

ஜோடியை வீழ்த்தித் தங்கப்பதக்கத்தை வென்றனர். ஹுவாங் தங்கப்பதக்கத்தை பெற்று மேடையில் இருந்து கீழே இறங்கிய பொழுது, மற்றொரு சீனப் பேட்மிண் டன் வீரர் லியூ யூசென், தம்மைத் திரு மணம் செய்து கொள்ளுமாறு கேட்டு ஹுவாங்கிடம் மோதிரத்தை நீட்டினார். இதைக் கண்டரசிகர்கள் ஆரவாரம் செய்த நிலையில், இந்த திடீர் சம்ப வத்தால் சற்றும் எதிர்பாராத ஹுவாங் திகைத்துப் போனார். தொடர்ந்து லியூ யூசென்னின் காதலை ஏற்றுக்கொண்ட பின், அவருக்கு மோதிரத்தை அணி வித்தார். இதைக் கண்டு ஹுவாங்கி னால் மகிழ்ச்சியைக் கட்டுப்படுத்த இயலவில்லை. இந்த நிகழ்வை வீடி யோவாக பதிவு செய்த அருகில் இருந்த வர்கள் அதை இணையத்தில் வெளியிட் டனர். தற்போது இந்த வீடியோ உல களவில் டாப்

டிரெண்டிங்கில் வைர லாகி வருகிறது.

**இந்திய வீரர்களுக்கு தனியாக குளிர்சாதன வசதி**

**40 கையடக்க ஏ.சி.,க்களை அனுப்பிவைத்த இந்திய ஒலிம்பிக் சங்கம்**

ஒலிம்பிக் தொடர் நடைபெற்று வரும் பிரான்ஸ் தலைநகர் பாரீசில் காலநிலை மாற்றத்தால் வழக்கத்திற்கு மாறாக கடும் வெப்ப அலை வீசி வருகிறது. இதனால் கடும் உஷ்ணம் காரணமாக இந்திய வீரர்கள் அவதிக்குள்ளாகி உள்ளனர். இந்நிலையில், ஒலிம்பிக் கிராமத்தில் கடும் உஷ்ணத்தால் அவதிப்படும் இந்தியர்களுக்கு 40 கையடக்க ஏசிகள் இந்திய ஒலிம்பிக் சங்கத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இந்திய ஒலிம்பிக் சங்கம் மூலம் 40 கையடக்க ஏ.சி.,க்களையும் பிரான்ஸ் தூதரகம் மூலம் ஒலிம்பிக்

கிராமத்தில் உள்ள இந்திய வீரர்களிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளன.

# 10. ஆகஸ்ட் 4, 2024

**அரையிறுதியில் இந்தியா**

பாரீஸ் ஒலிம்பிக் தொட ரில் இந்தியா சார்பில் மொத்தம் 117 வீரர் - வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர்.

துப்பாக்கிச்சூடுதலில் தவிர மற்ற பிரிவுகளில் இந்திய நட்சத்தி ரங்கள் கடுமையாக திணறி வரு கின்றனர். புரியும்படி சொன்னால் ஒலிம்பிக் தொடரில் இருத்து அடுத்த டுத்து வெளியேறி வருகின்றனர். எனினும் இந்திய ரசிகர்களுக்கு ஆறுதல் அளிக்கும் விதமாக ஆடவர் ஹாக்கி அணி அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி வரும் நிலையில், ஞாயிறன்று நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் இந்தியா - பிரிட்டன் அணிகள் பலப்பரீட்சை நடத்தின.







...

தொடக்கம் முதலே விறுவிறுப் பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தின் முழுநேர முடிவில் இரு நாடுகளும் 1-1 என்ற கோல் கணக்கில் சமனில் இருந்தன. இதனால் வெற்றியை தீர்மானிக்க பெனால்டி ஷூட் அவுட் முறை கடைபிடிக்கப்பட்டது. பெனால்டி ஷூட் அவுட்டில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய இந்தியா 4-2 என்ற கோல் கணக்கில் பலமான பிரிட்டனை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறி அசத்தியது.

**இந்திய வீரருக்கு ரெட் கார்டு**

**விதிகள் மீறி செயல்பட்டதால் இந்திய வீரர் அமித் ரோகிதாஸிற்கு கள நடுவர் ரெட் கார்டு கொடுத்தார். இதனால் மித் களத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட நிலையில், 2ஆம் பாதியில் இருந்து 10 வீரர்களுடன் மட்டுமே ஆடியது என்பது குறிப்பிடத்தக்கது.**

**லக்சயா சென் அதிர்ச்சி**

ஆடவர் பேட்மிண்டன் பிரிவில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்த அதிரடிக்கு பெயர் பெற்ற டென் மார்க்கின் விக்டர் ஆக்சல்சென்னை எதிர்கொண்டார். தொடக்கத்தில் ஆதிக்கம் செலுத்தி அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்த லக்சயா சென், முதல் செட்டின் நடுப்பகுதியில் திடீ ரென பார்ம் இழந்தார். இதனால் முதல் செட்டை ஆக்சல்சென் 22-20 என்ற கணக்கில் கைப்பற்றினார். தொடர்ந்து இரண்டாவது செட்டிலும் ஆதிக்கம் செலுத்திய விக்டர் ஆக்சல்சென் அந்த செட்டை 21-14 என்ற கணக்கில் கைப்பற்றி, 22-20, 21-14 என்ற கணக்கில் வெற்றி பெற்று இறுதிக்கு முன்னேறினார். இந்திய வீரர் லக்சயா சென் அரையிறுதியில் வெற்றி பெற்று தங்கம் அல்லது வெள்ளி வெல்வார் என எதிர்ப்பார்க்கப்பட்ட நிலையில்,

அரையிறுதியோடு அவர் வெளியேறினார். எனினும் ஒலிம்பிக் பேட்மிண்டன் விதிப்படி வெண்கலப் பதக்கத்திற்கான ஆட்டத்தில் லக்சயா சென் விளையாட உள்ளார்.

**லவ்லினாவும் அவுட்**

மகளிர் குத்துச்சண்டையில் கண்டிப்பாக பதக்கம் வெல்வார் என அதிகம் எதிர்பார்க்கப்பட்ட லவ்லினா போர்கோஹெய்ன் (72 கிலோ) ஞாயிறன்று நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் சீனாவின் லீ குவானை எதிர் கொண்டார். தொடக்கம் முதலே சீன வீராங்கனை லீ குவான் ஆக்ரோசமான தாக்குதலை கையி லெடுத்ததால் லவ்லினா நிலைகுலைந்தார். ஆட்டநேர முடிவில் சீனாவின் லீ குவானிடம் 4-1 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேற, கடந்த டோக்கியோ ஒலிம்பிக்கில் வெண்கலப்பதக்கம்

வென்ற லவ்லினா போர்கோஹெய்ன் பாரீஸ் ஒலிம்பிக் தொடரில் இருந்து வெறுங்கையோடு வெளியேறினார்.

**கடும் வெப்பம், காற்று மாசுபாடு உலகநாடுகளின் வீரர் - வீராங்கனைகள் அவதி**

ஒலிம்பிக் தொடர் நடைபெற்று வரும் பிரான்ஸ் தலைநகர் பாரீசில் கால நிலை மாற்றத்தால் வழக்கத்திற்கு மாறாக 40 டிகிரி செல்சியார் அள விற்கு கடும் வெப்ப அலை வீசி வருகிறது. குளிர்பிரதேச பகுதி யில் வெப்பம் மிரட்டி வருவதால் உலக நாடுகளின் வீரர் - வீராங் கனைகள் கடும் அவதிக் குள்ளாகி வருகின்றனர். இந்தியா, அமெரிக்கா, நார்வே, டென்மார்க், சுவீடன், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளின் வீரர்கள் - வீராங் கனைகள் வெப்ப அலையை தாங்க முடியாமல் போட்டியின் பொழுதே

சோர்ந்து கீழே உட்கார்ந்த சம்பவமம் அரங் கேறியுள்ளது. ஆடவர் 50 மீட்டர் 3 நிலை துப்பாக்கிச் சுடுதல் இறு திப் போட்டியில் வெண்கலப் கதக்கம் வென்ற இந்திய வீரர் ஸ்வப்னில் குசலே உள்பட அனை வரும் வெப்பத்தால் மயக்கம் வருவதாக போட்டி அமைப்பா ளர்களிடம் கூறியுள்ளதாக தகவல் ஒன்றும் வெளியாகியுள்ளது.

# 11. ஆகஸ்ட் 5, 2024

**துப்பாக்கிச் சுடுதல் இந்தியாவிற்கு மேலும் ஒரு பதக்க வாய்ப்பு**

பாரீஸ் ஒலிம்பிக் தொடரில் இந்தியா துப்பாக்கிச் சுடுதல் பிரிவில் மட்டுமே பதக்க வேட்டை நிகழ்த்தி வரும் நிலையில், துப்பாக்கிச் சுடுதல் ஸ்கீட் பிரிவில் இந்திய கலப்பு இரட்டையர் பிரிவு அணி வெண்கல பதக்கத்துக் கான போட்டிக்கு தகுதிபெற்றுள்ளது.

இந்தியாவின் மகேஸ்வரி சவுகான், ஆனந்த் ஜீத்சிங் ஜோடி வெண்கலப் பதக்கத்துக்கான போட்டிக்கு சீனா வின் லியு - ஜியாங் ஜோடியை எதிர் கொள்கிறது. இந்த ஆட்டம் மற்ற சுற்று போட்டிகள் நிறைவுபெற்ற பின் நடை பெறும் என்பதால், திங்களன்று


Sportwalk
media
INDIA
PARIS
2024

...

மாலை 5 அணி நிலவரப்படி போட்டி நடை பெறும் நேரம் குறித்து தகவல் எதுவும் வெளியாகவில்லை.

## 1.85 லட்சம் மக்கள் வாழும் செயின்ட் லூசியா குட்டித்தீவிற்கு தங்கம்

செயின்ட் லூசியா என்பது வட அமெரிக்காவில் உள்ள குட்டித்தீவு ஆகும். 238 சதுர கிமீ பரப்பளவு கொண்ட இந்த தீவில் மொத்தமே 1.85 லட்சம் மக்கள் வாழுகின்றனர். உலக வரைபடத்தில் லென்ஸ் போட்டு தேடினால் மட்டுமே தெரியும் என்ற நிலையில், பாரீஸ் ஒலிம்பிக் தொடரில் தடகளத்தில் 2 பேர், படகு போட்டி, நீச்சலில் தலா ஒருவர் என 4 பேர் பங்கேற்று உள்ளனர்.

இந்நிலையில், பாரீஸ் ஒலிம்பிக் தொடரின் மகளிருக்கான 100மீ ஓட்டப்பந்தயத்தில் செயின்ட் லூசியா தங்கப்பதக்கம் வென்று

வரலாறு படைத்துள்ளது. மகளிருக்கான 100மீ ஓட்டப் பந்தயத்தின் இறுதிச்சுற்றில் ஒலிம்பிக்கில் 4 முறை பதக்கம் வென்ற ஜமைக்கா நாட்டின் ஷெல்லி காயம் காரணமாக பங்கேற்கவில்லை. இதனால் நடப்பு உலக சாம்பியன்ஷிப் தொடரில் தங்கப்பதக்கம் வென்ற அமெரிக்காவின் ஷிக்காரிய ரிச்சர்ட்சன் முதலிடத்துடன் தங்கப் பதக்கம் வெல்வார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் யாரும் எதிர்பாராத வகை யில் இறுதிப்போட்டியில் செயின்ட் லூசியா தீவின் ஜூலியன் ஆப்பிரட் (10.72 வினாடியில்) என்ற வீராங் கனை தங்கப்பதக்கம் வென்று அசத்தி யுள்ளார். அமெரிக்க வீராங்கனை ஷிக்காரியா ரிச்சர்ட்சன் (10.87) வெள்ளிப் பதக்கத்தையும், மற்றொரு அமெரிக்க வீராங்கனை ஆன மெலிசா ஜெபர்ஸன் (10. 92) வெண்கலப் பதக்கத்தை வென்றனர்.

150 கோடி மக்கள் தொகை கொண்ட இந்தியா ஒலிம்பிக்கில் 5 பதக்கம் கூட வெல்ல முடியாமல் திணறி வரும் நிலையில், வெறும் 1.85 லட்சம் மக்கள் தொகை கொண்ட செயின்ட் லூசியா ஒலிம்பிக் தொடரின் நட்சத்திர பிரிவான மகளிர் 100மீ ஓட்டப்பந்த யத்தில் தங்கம் வென்று இருப்பது விளையாட்டு உலகில் பலத்த பாராட்டுகளை பெற்றுள்ளது.

# 12. ஆகஸ்ட் 6, 2024

**இறுதிச் சுற்றில் நீரஜ் சோப்ரா**

ஆடவர் ஈட்டி எறிதல் பிரிவுக்கான தகுதிச் சுற்று செவ்வாயன்று மதியம் நடைபெற்றது. 15 பேர் பங்கேற்ற “குரூப் ஏ” பிரிவில் ஜூலியன் (87.76 மீ - ஜெர்மனி), ஜூலியஸ் (85.97 மீ - கென்யா), வாட்லிஜ் (85.63 மீ - செக்குடியரசு), டோனி (85.27 மீ - பின்லாந்து) உள்ளிட்ட 6 பேர் இறுதிச்சுற்றுக்கு முன்னேறினர். தொடர்ந்து இந்திய அணியின் நட்சத்திர வீரரும், டோக்கியோ ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வென்றவருமான நீரஜ் சோப்ரா இடம்பிடித்த “குரூப் பி” பிரிவிற்கான தகுதிச் சுற்று ஆட்டம் நடைபெற்றது.

15 நாடுகளைச் சேர்ந்தவர்கள் பங்குபெற்ற “குரூப் பி” பிரிவிற்கான தகுதிச் சுற்றின் முதல்







...

முயற்சியிலேயே இந்திய வீரர் நீரஜ் சோப்ரா 89.34 மீ தூரம் ஈட்டி எறிந்து முதலிடம் பிடித்தார். அதன்பிறகு 3 சுற்றிலும் 15 நாடுகளின் வீரர்கள் கடுமையாக போராடியும் நீரஜ் சோப்ரா எறிந்த தூரத்தை யாரும் நெருங்க முடியவில்லை. இறுதியில் நீரஜ் சோப்ரா முதலிட அந்தஸ்துடன் இறுதிச் சுற்றுக்கு முன்னேறினார்.

கிரேனடா வீரர் பீட்டர் (88.63 மீ) 2ஆவது இடத்துடனும், பாகிஸ்தான் வீரர் அர்ஷாத் நீதீம் (86.59 மீ) 3ஆவது இடத்துடனும், 4ஆவது இடத்தைபிடித்த பிரேசில் வீரர் டி சில்வாவும் (85.91 மீ), 5ஆவது இடத்தை பிடித்த மால்டோவா வீரர் ஆன்டிரியன் (84.13 மீ) ஆகியோர் இறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்றனர். 12 பேர் பங்கேற்கும் இறுதிச் சுற்று ஆகஸ்ட் 8 அன்று நடைபெறுகிறது.

## ஒலிம்பிக் சாம்பியனை வீழ்த்திய வினேஷ்

**போகத்**

மகளிர் மல்யுத்தத்தில் 50 கிலோ எடைப் பிரிவின் நாக் அவுட் சுற்று போட்டியில் இந்திய வீராங்கனை வினேஷ் போகத், நடப்பு ஒலிம்பிக் சாம்பியனான ஜப்பான் வீராங்கனை சுசய் யுய்-யை எதிர்கொண்டார். தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய வினேஷ் போகத் சுசய் யுய்-யை 3-2 என்ற புள்ளிகள் கணக்கில் வீழ்த்தி காலிறுதி சுற்றுக்கு தகுதி பெற்றார். தொடர்ந்து நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் உக்ரைனை சேர்ந்த ஒக்ஸானா லிவாச் என்பவரை எதிர்கொண்டார் வினேஷ் போகத். நாக் அவுட் சுற்றைப்போலவே அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய வினேஷ் போகத் 5-7 என்ற புள்ளிக்கணக்கில் வெற்றி பெற்று லிவாச்சை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார்.

**அதிக பதக்கம் வென்றவர்களின்**

## பட்டியலில் சீன வீராங்கனை முதலிடம்

பாரீஸ் ஒலிம்பிக் தொடரின் தனிநபர் பிரிவில் அதிக பதக்கம் வென்றவர்களின் பட்டியலில் சீன வீராங்கனை முதலிடம் பிடித்துள்ளார். நீச்சல் பிரிவு வீராங்கனையான ஜெங் யுபெய் 1 வெள்ளி, 5 வெண்கலம் என மொத்தமாக 6 பதக்கங்களை வென்று முதலிடத்தில் உள்ளார். பிரான்ஸ் நீச்சல் வீரர் மார்ச்சன்ட் லியோன் 4 தங்கம், 1 வெண்கலம் என 5 பதக்கங்களுடன் 2ஆவது இடத்திலும், அமெரிக்க வீரர் டோரி ஹூசேக் 3 தங்கம், 2 வெள்ளி என 5 பதக்கங்களுடன் 3ஆவது இடத்திலும் உள்ளனர். தனிநபராக அதிக பதக்கம் வென்றவர்களின் பட்டியலில் முதல் 7 இடங்களில் நீச்சல் பிரிவைச் சேர்ந்தவர்கள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# 13. ஆகஸ்ட் 7, 2024

**பாரீஸ் ஒலிம்பிக்கில் 2 பதக்கம் வென்ற மனு பாக்கருக்கு தில்லியில் உற்சாக வரவேற்பு**

பாரீஸ் ஒலிம்பிக்கில் 22 வயதான மனு பாக்கர் 10 மீட்டர் ஏர் பிஸ்டல் ஒற்றையர் மற்றும் 10 மீட்டர் ஏர் பிஸ்டல் கலப்பு இரட்டையர் என இரண்டு பிரிவுகளில் வெண்கலப் பதக்கம் வென்று அசத்தினார். ஒலிம்பிக் வரலாற்றில் ஒரே சீசனில் இரண்டு பதக்கங்களை வென்ற முதல் இந்திய வீராங்கனை என்ற சாதனையை மனு பாக்கர் படைத்த நிலையில், பதக்க நாயகி மனு பாக்கர் புதனன்று காலை தில்லி திரும்பினார். பெற்றோர் ராம் கிஷன் மற்றும் தாய் சுமேதா ஆகியோர் மனு பாக்கரை முத்தமிட்டு விமான நிலையத்திலிருந்து வெளியே அழைத்து வந்தனர். தொடர்ந்து



…

ரசிகர்கள் மலர் கொத்துகள் வழங்கியும், மனு பாக்கரை தோள் மீது சுமந்து ஊர்வலமாக கொண்டு சென்றும் உற்சாகமாக கொண்டாடி மகிழ்ந்தனர்.

**மீண்டும் பாரீஸ்...**

ஞாயிறன்று நடைபெறும் நிறைவு விழாவில் பங்கேற்பதற்காக சனியன்று மீண்டும் பாரீஸுக்குச் செல்லும் மனு பாக்கர், ஒலிம்பிக் நிறைவு விழாவில் இந்தியக் கொடியை ஏந்திச் செல்ல உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 14. ஆகஸ்ட் 8, 2024

## ஓய்வை அறிவித்தார் வினேஷ் போகத்

பாரீஸ் ஒலிம்பிக் தொடரின் மகளிர் மல்யுத்தம் 50 கிலோ பிரீஸ்டைல் பிரிவில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய இந்திய வீராங்கனை வினேஷ் போகத் இறுதிப்போட்டிக்கு முன் னேறினார். இறுதிப்போட்டி நடைபெற 12 மணிநேர இடைவெளி இருந்த நிலையில், எடை பரிசோதனையில் 100 கிராம் எடை கூடுதலாக இருந்ததை காரணம் காட்டி வினேஷ் போகத் ஒலிம்பிக் தொடரில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்டார்.

இந்திய ஒலிம்பிக் சங்கம் மேல்முறை யீடு செய்து போராடியும் எந்த பலனும் கிடைக்காத நிலையில், இறுதியில் வினேஷ் போகத்தின்



...

தகுதி நீக்கம் உறுதி செய்யப்பட்டதாக சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனம் அறிவித்தது.

செவ்வாயன்று இரவு முதல் எடையை குறைக்க கடினமான உடற்பயிற்சி மேற் கொண்டதாலும், அதிகமான அளவில் ரத்தம் வெளியேற்றப்பட்டதாலும் நீர்ச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்ட வினேஷ் போகத் தீவிர உடல்நலக்குறைவு காரணமாக பாரீஸ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்நிலையில், பாரீஸ் மருத்துவமனை யில் இருந்தே மல்யுத்த விளையாட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக வினேஷ் போகத் அறிவித்துள்ளார். இதுகுறித்து தனது டுவிட்டர் எக்ஸ் பக்கத்தில் வினேஷ் போகத் கூறுகையில், “நான் தோற்றுவிட்டேன், மல்யுத்தம் வென்று விட்டது. என்னை மன்னிக்கவும், எனது தாயாரின் கனவும்

என்னுடைய தைரியமும் உடைந்து போயுள்ளன. இனி மேலும் போராட என்னிடம் வலு வில்லை. மல்யுத்தத்திலிருந்து (2001 – 2024) விடைபெறுகிறேன். உங்கள் அனை வருக்கும் எப்போதும் கடமைப் பட்டுள்ளேன்" என அவர் கூறியுள்ளார்.

## 100 கிராம் என்றால் தலைமுடியை இன்னும் குறைத்து இருக்கலாமே?

இறுதிப்போட்டிக்கு முன்னர் புதனன்று மாலை வினேஷ் போகத் 150 கிராம் கூடுதலாக எடை கூடி யுள்ளதாகவும், அவர் தகுதி நீக்கம் செய்யப்பட்டதாக தொடக்கத்தில் தகவல் வெளி யாகியது. அதன் பின்னர் 100 கிராம் தான் எடை கூடுதலாக இருந்ததால் வினேஷ் போகத் தகுதி நீக்கம் செய்யப்பட்டதாக இந்திய ஒலிம்பிக் கமிட்டியில் இடம்பெற்றுள்ள மருத்து வக்குழு தகவல் தெரிவித்தது. வெறும் 100 கிராம் என்றால் வினேஷ் போகத்தின் தலை

முடியை இன்னும் குறைத்து இருக்கலாம். பதற்றத்தில் இருந்த வினேஷ் போகத்திற்கு பயிற்சியாளர் மற்றும் இந்திய மருத்துவக்குழு இந்த யோசனையைக் கூட கூறாதது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

**கென்யா வீராங்கனையின் தகுதி நீக்கம் ரத்து**

**வினேஷ் போகத்தின் தகுதி நீக்கம் குறித்து வாய்திறக்க மறுக்கும் சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனம்**

மகளிர் 5000 மீ ஓட்டப் பந்தயத்தில் கென்யாவின் பீட்ரைஸ் செபெட் முதலிடமும், மற்றொரு கென்ய வீராங்கனையான பெய்த் கிபிகோன் இரண்டாவது இடமும், நெதர்லாந்தின் சிபன் ஹாசன் மூன்றாவது இடமும் பிடித்தனர். வெள்ளிப்பதக்கம் வென்ற கென்யா வின் பெய்த் கிபிகோன்

ஓட்டப்பந்த யத்தின் போது வெண்கல பதக்கம் வென்ற நெதர்லாந்து வீராங்கனை சிபன் ஹாசனை முன்னேறி செல்வ தற்கு இடையூறு செய்ததாகவும், அவ ரை 2ஆம் இடம்பிடிக்கவிடாமல் களத்தில் தடங்கல் ஏற்படுத்தியதாக வும் குற்றம்சாட்டப்பட்டதால் கென்யா வீராங்கனை கிபிகோனின் வெள்ளிப்பதக்கம் பறிக்கப்பட்டு அவர் தகுதிநீக்கம் செய்யப்பட்டார்.

கென்ய ஒலிம்பிக் சங்கம், பாரீஸ் ஒலிம்பிக் கமிட்டியிடம் மேல்முறையீடு செய்தது. உடனடி பேச்சுவார்த்தை மூலம் கிபிகோனின் தகுதிநீக்கம் ரத்துச் செய்யப்பட்டு அவருக்கான வெள்ளிப்பதக்கமும் உறுதிசெய்யப் பட்டது. ஆனால் மேல்முறையீடு செய்தும் வினேஷ் போகத் தகுதி நீக்க விவகாரம் பற்றி பாரீஸ் ஒலிம்பிக் கமிட்டியும், சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனமும் வாய் திறக்காமல் இருப்பது

கடும் சர்ச்சையை ஏற்படுத்தி யுள்ளது.

# 15. ஆகஸ்ட் 9, 2024

**பாரீஸ், பிரான்ஸ் ஜூலை 26 முதல் ஆகஸ்ட் 11 வரை**

**பதக்கப்பட்டியலில் இந்தியாவை பின்னுக்குத்தள்ளிய பாகிஸ்தான்**

**பாரீஸ் ஒலிம்பிக்கில் இந்தியா 1 வெள்ளி, 4 வெண்கலம் என 5 பதக்கங்களுடன் 64ஆவது இடத்தில் உள்ளது. ஆனால் ஒரே ஒரு தங்கப்பதக்கம் வென்ற பாகிஸ்தான் அணி 53ஆவது இடத்திற்கு முன்னேறி இந்தியாவை பின்னுக்குத் தள்ளியுள்ளது.**

**மீண்டும் தழைத்தது இந்தியா - பாகிஸ்தான் சகோதரத்துவம் “நதீமும் என் மகன் தான்” ; நீரஜ் சோப்ரா தாயார் நெகிழ்ச்சி**

நீரஜ் சோப்ராவின் தாயார் சரோஜ் தேவி பத்திரிகையாளர்கள் சந்திப்பின்





...

பொழுது,“நீரஜ் வெள்ளிப் பதக்கம் வென்றது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. தங்கப்பதக்கம் வென்ற அந்த வீரரும் (அஷ்ரத் நதீம்) எனது மகன்தான். அங்கு செல்லும் அனைவரும் கடினமாக உழைக்கிறார் கள். நீரஜ் சோப்ரா வீட்டுக்கு வந்தவுடன் அவருக்கு விருப்பமான உணவை நான் சமைத்து கொடுப்பேன்” எனக்கூறினார்.

நீரஜ் சோப்ராவின் தாயார் சரோஜ் தேவியின் இந்த கருத்து சமூகவலைத் தளங்களில் டாப் டிரெண்ட்டிங்கில் வைர லாகி வரும் நிலையில், இந்திய ரசிகர் கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் பாகிஸ்தான் வீரர் அஷ்ரத் நதீம் எங்க ளது சகோதரர் எனக் கூறி வாழ்த்துக் களுடன் மீம்ஸ் வெளியிட்டு கொண்டாடி வருகின்றனர்.

**“அன்று ஈட்டி வாங்க காசு இல்லை” வறுமையை வென்ற கட்டிடத் தொழிலாளி**

**மகன்**

பாரீஸ் ஒலிம்பிக்கின் ஈட்டி எறிதல் பிரிவில் தங்கப் பதக்கம் வென்ற அஷ்ரத் நதீம் பாகிஸ் தான் நாட்டின் பஞ்சாப் பகுதியைச் சேர்ந்தவர். கட்டிடத் தொழிலாளி மக னான இவர் தனது தந்தை முகமது அஷ்ரப்பின் சொற்ப வருமானத்தில் ஈட்டி எறிதல் பிரிவில் பயிற்சி பெற்றார். கடன் மற்றும் இதர சேமிப்பு பணத்தின் மூலம் 2015இல் அவரது தந்தை ஈட்டி வாங்கி கொடுத்தார். இந்த ஒரே ஈட்டியைத்தான் கடந்த 9 ஆண்டுகளாக பயிற்சி மற்றும் சர்வதேசப் போட்டிக்கு பயன்படுத்தினார் அஷ்ரத் நதீம்.

பாரீஸ் ஒலிம்பிக் தொடருக்கு முன் னர் அந்த ஈட்டி மிக மோசமான அள வில் உருக்குலைந்த நிலையில், அஷ்ரத் நதீம் தேசிய விளையாட்டு ஆணையத் திடம், “பாரீஸ் ஒலிம்பிக் தொடரில் பங்

ங்கேற்க எனக்கு ஒரு ஈட்டி வேண்டும்” என கோரிக்கை விடுத்தார். நிதி நெருக் கடியால் சிக்கிய தேசிய விளையாட்டு ஆணையம் சிறிது காலதாமதம் செய்த நிலையில், இந்திய அரசைப் போல பாகிஸ்தான் அரசும் அஷ்ரத்துக்கு உதவ வேண்டும் என நீரஜ் சோப்ரா உட்பட பலர் கோரிக்கை விடுத்தனர். இறுதியில் பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் அஷ்ரத் நதீமுக்கு ஸ்பான் சராக இருக்க சம்மதம் தெரிவித்து, ரூ.86,000 மதிப்புள்ள ஈட்டியை வாங்கிக் கொடுத்து மற்ற செலவுகளையும் கவ னித்துக் கொண்டது. இந்த உதவியின் மூலமும், வறு மையை சமாளித்து எதிர்கொண்ட போராட்ட த்தின் மூலமும் அஷ்ரத் நதீம் ஒலிம் பிக்கில் தங்கப்பதக்கம் வென்று வர லாறு படைத்தார்.

**சாதனை**

பாகிஸ்தான் நாடு 1960, 1968, 1984 ஆகிய

3 ஆண்டுகளில் நடைபெற்ற ஒலிம்பிக் தொடரில் தங்கப்பதக்கம் வென்றது. இந்த 3 தங்கப்பதக்கமும் ஹாக்கியில் மட்டுமே கிடைத்த நிலை யில், தனிநபராக 40 ஆண்டுகளுக்குப் பின் தங்கப்பதக்கம் வென்று பாகிஸ் தான் நாட்டிற்கு பெருமை சேர்த்துள் ளார் நதீம்.

**மாதவிடாய் நாளிலும் நாட்டுக்காக போராடிய மீராபாய் சானு**

இந்தியாவின் நட்சத்திர பளு தூக்குதல் வீராங்கனையும், டோக்கியோ ஒலிம்பிக் போல பாரீஸ் ஒலிம்பிக்கிலும் பதக்கம் வெல்வார் என எதிர்பார்க்கப்பட்ட மீராபாய் சானு தான் களமிறங்கிய 48 கிலோ பிரிவில் 4ஆம் இடம் பிடித்து நூலிழையில் பதக்க வாய்ப்பை இழந்தார். மீராபாய் சானு பதக்கம் பெறாதது நாட்டு மக்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தினாலும், நாட்டுக்காக அவர் செய்த

சம்பவம் பாராட்டுகளை குவித்து வருகிறது. அது யாதெனில் மாதவிடாய் நாளில் மீராபாய் சானு உடல் வலியையும் பொருட் படுத்தாமல் நாட்டுக்காக 199 கிலோ வரை பளு தூக்கி வெற்றிக்காக போராடி யுள்ளார். மீராபாய் சானுவின் உள்ள உறுதி அதிர்ச்சி கலந்த ஆச்சர்யத்தை ஏற்படுத்தியுள்ளநிலையில், அவருக்கு நாடு முழுவதும் விளையாட்டு ரசிகர்கள், நெட்டிசன்கள் என அனைத்து தரப்பினரும் பாராட்டு தெரிவித்தனர். இதுதொடர்பாக மீரா பாய் சானு கூறுகையில், “நாட்டுக்காக நான் கடுமையாக போராடினேன். ஆனால் எனது உடல்நலக்குறைவு எனது ஆட்டத்திறனை சற்று பாதித்தது. காரணம் நான்போட்டியில் கலந்து கொண்ட நாளன்று மாதவிடாயின் மூன் றாவது நாளில் இருந்தேன். இது எனது உடல்நிலையை பலவீனமாக்கியது. இருந்தாலும் பாரீஸ்

ஒலிம்பிக்கில் எனது செயல்திறன் குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன்” என அவர் கூறினார்.

மாதவிடாய் நாட்களில் பெண்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வரும் நிலையில், நாட்டுக்காக 199 கிலோ தூக்கி பதக்கத்திற்காக போராடிய மீரா பாய் சானுவின் செயல்பாடு நெகிழ்ச்சி யை



ஏற்படுத்தியுள்ளது

## 16. ஆகஸ்ட் 10, 2024

### இன்றுடன் ஒலிம்பிக் போட்டிகள் நிறைவு

33ஆவது ஒலிம்பிக் தொடர் பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் நடைபெற்று வருகிறது. அனைத்து பிரிவு போட்டிகளும் ஏறக்குறைய நிறைவுபெற்ற நிலையில், மல்யுத்த பிரிவு மட்டுமே பாக்கி உள்ளன. மல்யுத்த பிரிவுகள் ஞாயிறன்று நிறைவு பெறும் நிலையில், அதோடு பாரீஸ் ஒலிம்பிக் தொடரும் நிறைவு பெறுகிறது. அதன்பிறகு திங்களன்று கோலாகல நிறைவு விழா நடைபெறு கிறது.

### சாயம் போகுதா? ஒலிம்பிக் பதக்கம் தரமாக இல்லை ; அமெரிக்க வீரர் குற்றச்சாட்டு

பாரீஸ் ஒலிம்பிக்கில் நைஜா ஹஸ்டன் என்ற அமெரிக்கா வைச் சேர்ந்த ஸ்கேட்டிங் வீரர் ஜூலை 29 அன்று வெண்கலப்

பதக்கம் வென்றிருந்தார். இவர் பதக்கத்தை வென்று அமெ ரிக்கா சென்ற ஒரே வாரத்தில் வெண்கலப்பதக்கத்தின் நிறம் மாறியுள்ளதாக அவர் குற்றம்சாட்டினார். இதற்கான படத்தை அவர் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டுள்ள நிலையில், இந்த விவகாரம் கடும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

**பெண்ணுக்கும், ஆணுக்கும் வித்தியாசம் இல்லையா? அமன் விவகாரம் மூலம் வினேஷின் பிரச்சனையை மூடி மறைக்க திட்டம்?**

இந்திய மல்யுத்த நட்சத்திர வீரா ங்கனை வினேஷ் போகத் பாரீஸில் அசத்தலான ஆட் டத்தை வெளிப்படுத்தினார். ஆனால் இறுதிச் சுற்றுக்கு முன்னதாக 100 கிராம் எடை கூடுதலாக இருந்ததாக கூறி தகுதி நீக்கம் செய்யப்பட்டார். முன்னாள் பாஜக

எம்.பி., பிரிஜ் பூஷணின் பாலியல் வன்கொடுமைக்கு எதிராக போராடியதன் கார ணமாகவே அரசியல் சூழ்ச்சியால் வினேஷ் போகத் தகுதி நீக்கம் செய் யப்பட்டு இருக்கலாம் என பல் வேறு சந்தேகங்கள் எழுந்து வரு கின்றன. மேலும் ஒலிம்பிக்கில் முன் னர் அரங்கேறிய ஆதாரமில்லா சம்ப வங்களை சுட்டிக்காட்டி வினேஷ் போகத் விவகாரத்தை மூடி மறைக்க பாஜக எம்.பி.,க்கள், “கோடி மீடியா” ஊடகங்கள் தீவிரமாக இறங்கி யுள்ளன. இந்நிலையில், பாரீஸ் ஒலிம்பிக் கில் ஆடவர் 57 கிலோ மல்யுத்த பிரி வில் வெண்கலப்பதக்கம் வென்ற அமன் ஷெராவத், வெண்கலப் பதக் கத்திற்கான போட்டி நடைபெறும் முன்பு 61.5 கிலோ இருந்ததாகவும், பல்வேறு தீவிர பயிற்சிக்கு பின்னர் சரியான உடல் எடையுடன் அவர் போட்டியில் பங்கேற்றார் என தக வல் வெளியாகியுள்ளது. அமன்

ஷெராவத் 4.5 கிலோ எடை குறைத்து நாட்டிற்காக வெண்கலப்பதக்கம் வென்றது மகிழ்ச்சியான விசயம் தான் என்றாலும், இந்த விவகாரத்தை வினேஷ் போகத் பிரச்சனையுடன் தொடர்புபடுத்தி அதனை மூடி மறைப்பது போன்று கூறுவது மிக வும் தவறானது ஆகும். அமன் விஷயத்தில் காட்டிய ஆர்வமும் முயற்சியும் வினேஷ் விஷ யத்தில் காட்டப்படாதது ஏன் என்ற கேள்வி எழுவது இயல்பானதே!

**இதையெல்லாம் வினேஷிற்கு ஏன் செய்யவில்லை**

அமன் எடையை குறைக்க 90 நிமி டங்களுக்கு இரண்டு மூத்த பயிற்சி யாளர்களுடன் இடைவிடா மல்யுத்தப் போட்டி, 1 மணி நேரம் வெந்நீர் குளியல், டிரெட்மில்லில் 1 மணி நேரம் தொடர்ச்சி யாக ஓட்டம், சானா குளியல் (sauna- bath) எனப்படும் வெப்ப

சிகிச்சை, மசாஜ், மினி ஜாக்கிங், லிக்வார்ம் வாட் டர், எலுமிச்சை, தேன் மற்றும் காபி ஆகி யவை மட்டுமே உணவாக கொடுத்து உறங்கவிடாமல் பார்த்துக்கொண்டது இந்திய பயிற்சியாளர்கள் குழு. ஆனால் இதனை ஏன் வினேஷ் போகத்திற்கு செய்யவில்லை. அவரும் பதக்கப் போட்டியில் தானே பங்கேற்க இருந்தார் என பல்வேறு கேள்விகள் எழுகின்றன.

**இந்தியாவின் பதக்க எண்ணிக்கை 6 ஆக உயர்வு**


பாரீஸ் ஒலிம்பிக் போட்டியில் இந்தியா வென்ற பதக்க எண்ணிக்கை 6 ஆக உயர்ந்துள்ளது. வெள்ளியன்று இரவு நடை பெற்ற ஆடவர் 57 கிலோ மல்யுத்த பிரிவில் இந்திய வீரர் அமன் செராவத், போர்ட்டோ ரிக்கோ வீரர் டேரியன் டாய் குரூஸை 13-5 என்ற புள்ளிக்கணக்கில் வீழ்த்தி வெண்

கலப் பதக்கம் வென்றார். இதன்மூலம் இந்தியாவின் பதக்க எண்ணிக்கை 6 ஆக (1 வெள்ளி, 5 வெண்கலம்) உயர்ந்துள்ளது.

## 17. ஆகஸ்ட் 11, 2024

**பாரீஸ், பிரான்ஸ் ஜூலை 26 முதல் ஆகஸ்ட் 11 வரை முடிவடைந்தது ஒலிம்பிக்**

உலகின் முதன்மையான விளையாட்டுப் போட்டித் தொடரான ஒலிம்பிக் தொடரின் 33ஆவது சீசன் கடந்த ஜூலை 26 அன்று பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் தொடங்கியது. கடுமையான வெயில், புழுதிப் புயலுக்கு (லேசான அளவில் - காற்றுமாசுபாடு ஏற்படும் அளவிற்கு) இடையே நடைபெற்ற இந்த ஒலிம்பிக் தொடரின் பதக்கப் பட்டியலில் சீனா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகள் செலுத்தியுள்ள நிலையில், ஞாயிறன்று இரவு பாரீஸ் ஒலிம்பிக் தொடரின் அனைத்து பிரிவு விளையாட்டுப் போட்டிகளும் நிறைவு பெற்றன.


...

## 71ஆவது இடத்திற்கு தள்ளப்பட்ட இந்தியா

பாரீஸ் ஒலிம்பிக்கில் இந்தியா சார்பில் மொத்தம் 117 வீரர் - வீராங்கனைகள் கலந்து கொண்டனர். இந்த 117 பேர்களில் வெறும் 5 பேர் மட்டுமே சிறப்பாக விளையாடினர். மற்ற 111 பேர் (வினேஷ் போகத்தை சேர்க்க வில்லை) சொதப்பலாக விளையாடிய நிலையில், இந்தியா ஒரு வெள்ளி, 5 வெண் கலம் என 6 பதக்கங்களுடன் பதக்கப்பட்டி யலில் 71ஆவது இடத்திற்கு பின்னோக்கிச் சென்றுள்ளது.

2020இல் நடைபெற்ற டோக்கியோ ஒலிம்பிக்கில் ஒரு தங்கம், 2 வெள்ளி, 4 வெண்கலம் என 7 பதக்கங்களுடன் 48 ஆவது இடத்தில் இருந்த இந்தியா, பாரீஸ் ஒலிம்பிக்கில் வீரர்கள் தேர்வு, மோடி அரசின் பாரபட்ச மான நடவடிக்கையால் 23 இடங்கள் பின்னோக்கி 71ஆவது இடத்தை

பிடித்துள்ளது.

உலக வரைபடத்தில் கண்ணுக்குத் தெரியாத குட்டி நாடுகள் கூட ஒலிம்பிக் பதக்கப்பட்டியலில் தங்கம், வெள்ளி என பதக்கங்களை குவித்து முதல் 50 இடங்களில் உள்ளது. ஆனால் 148 கோடி மக்கள் தொகை கொண்ட உலகின் மிகப் பெரிய நாடுகளில் ஒன்றான இந்தியா பதக்கப்பட்டியலில் 71ஆவது இடத்தை பிடித்து குட்டி நாடுகள் இருக்கும் இடங்களில் இருப்பது சமூகவலைத்தளங்களில் கடுமையான விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது.

**இமான் கலீப்-க்கு ஆதரவாக களமிறங்கும் சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனம்**

**பாலினம் தொடர்பாக அவதூறு தெரிவித்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க பாரீஸ் போலீசார் தீவிரம்**

ஒலிம்பிக் தொடரின் மகளிர் குத்துச்சண்டை 66 கிலோ எடைப் பிரிவில் அல்ஜீரியாவைச் சேர்ந்த இமான் கலீப் தங்கப்பதக்கம் வென்றார். இமான் கலீப் தனது நாக் அவுட் சுற்று ஆட்டத்தில் இத்தாலியின் கரிணியை எதிர்கொண்டார். போட்டி யின் பொழுது இத்தாலியின் கரிணி, “இமான் கலீப் பெண் இல்லை. அவர் ஆண். இதனால் அவருடன் என்னால் விளையாட முடியாது” எனக் கூறி போட்டியில் இருந்து வெளியேறினார்.

இந்த சம்பவத்திற்கு பின் இமான் கலீப்பிறகு எதிராக கண்டனங்களும், ஆதரவான கருத்துக்களும் கிளப்பின. ஆனால் சிலர் கண்டனம் தெரி விப்பதாக கூறி இமான் கலீப்பிறகு எதிராக அவதூறுகளை பரப்பினர்.

இந்நிலையில், இமான் கலீப் தன்னுடைய

பாலினம் தொடர்பாக அனைத்து ஆதார தகவல்களையும் வெளியிட்டு, தன் மீது அவதூறு பரப்புவதாக சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியிடம் புகார் அளித்துள்ளார். புகாரை ஏற்றுக்கொண்ட சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனம், இந்த விவ காரம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கு மாறு பாரீஸ் போலீசாரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக தகவல் வெளியாகி யுள்ளது. பாலினம் தெரிந்துதான் இமான் கலீப்-க்கு ஒலிம்பிக்கில் கள மிறங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதால், இமான் கலீப்-க்கு ஆதர வாக சர்வதேச ஒலிம்பிக் சம்மேளன மும் களமிறக்கியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

**சமூக வலைத்தள கணக்குகள் முடக்கப்படலாம்**

இமான் கலீப்-பிறகு எதிராக

சமூகவலைத்தளங்களில் ஆபாச மீம்ஸ்களுடன் உலகம் முழுவதும் அவதூறு கருத்துக்கள் பரப்பப்பட்டுள்ளன. அதனால் முதல் நடவடிக்கையாக அவதூறு கருத்துக்களை பரப்பிய நபர்களின் சமூகவலைத்தள கணக்குகளை முடக்கிய பின்னர், சம்மந்தப்பட்ட சமூகவலைத்தள கணக்குகளின் உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் பாரீஸ் போலீசார் திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த தகவல் உண்மை எனில் இமான் கலீப்-பிறகு எதிராக கருத்து தெரிவித்த அனைவரின் சமூக வலைத்தள கணக்குகள் முடக்கப்படலாம்.

#### தொலை நோக்கு – Vision

தமிழ் மொழி மற்றும் இனக்குழுக்கள் சார்ந்த மெய்நிகர்வளங்கள், கருவிகள் மற்றும் அறிவுத்தொகுதிகள், அனைவருக்கும் கட்டற்ற அணுக்கத்தில் கிடைக்கும் சூழலை உருவாக்குதல்.

#### பணி இலக்கு – Mission

அறிவியல் மற்றும் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு ஒப்ப, தமிழ் மொழியின் பயன்பாடு வளர்வதை உறுதிப்படுத்துவதும்,

அனைத்து அறிவுத் தொகுதிகளும், வளங்களும் கட்டற்ற அணுக்கத்தில் அனைவருக்கும் கிடைக்கச்செய்தலும்.

**எமது பணிகள்**

- **கணியம் மின்னிதழ்** kaniyam.com
- கணிப்பொறி சார்ந்த கட்டுரைகள், காணொளிகள், மின்னூல்களை இங்கு வெளியிடுகிறோம்.
- **கட்டற்ற தமிழ் நூல்கள்** FreeTamilEbooks.com
- இங்கு யாவரும் எங்கும் பகிரும் வகையில், கிரியேட்டிவ் காமன்ஸ் உரிமையில், தமிழ் மின்னூல்களை இலவசமாக, அனைத்துக் கருவிகளிலும் படிக்கும் வகையில் epub, mobi, A4 PDF, 6 inch PDF வடிவங்களில் வெளியிடுகிறோம்.

- தமிழுக்கான கட்டற்ற மென்பொருட்கள் உருவாக்கம்
- தமிழ் ஒலியோடைகள் உருவாக்கி வெளியிடுதல்
- விக்கி மூலத்தில் உள்ள மின்னூல்களை பகுதிநேர/முழு நேரப் பணியாளர்கள் மூலம் விரைந்து பிழை திருத்துதல்
- OpenStreetMap.org ல் உள்ள இடம், தெரு, ஊர் பெயர்களை தமிழாக்கம் செய்தல்.

மேற்கண்ட திட்டங்கள், மென்பொருட்களை உருவாக்கி செயல்படுத்த உங்கள் அனைவரின் ஆதரவும் தேவை. உங்களால் எவ்வாறேனும் பங்களிக்க இயலும் எனில் உங்கள் விவரங்களை kaniyamfoundation@gmail.com க்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

**வெளிப்படைத்தன்மை**

கணியம் அறக்கட்டளையின் செயல்கள், திட்டங்கள், மென்பொருட்கள் யாவும் அனைவருக்கும் பொதுவானதாகவும், முழுமையான வெளிப்படைத்தன்மையுடனும் இருக்கும். https://github.com/KaniyamFoundation/Organization/issues இந்த இணைப்பில் செயல்களையும், https://github.com/KaniyamFoundation/Organization/wiki இந்த இணைப்பில் மாத அறிக்கை, வரவு செலவு விவரங்களுடனும் காணலாம்.

கணியம் அறக்கட்டளையில் உருவாக்கப்படும் மென்பொருட்கள் யாவும் கட்டற்ற மென்பொருட்களாக மூல நிரலுடன், GNU GPL, Apache, BSD, MIT, Mozilla ஆகிய உரிமைகளில் ஒன்றாக வெளியிடப்படும். உருவாக்கப்படும் பிற வளங்கள், புகைப்படங்கள், ஒலிக்கோப்புகள், காணொளிகள், மின்னூல்கள், கட்டுரைகள்

யாவும் யாவரும் பகிரும், பயன்படுத்தும் வகையில் கிரியேட்டிவ் காமன்சு உரிமையில் இருக்கும்.

## நன்கொடை

உங்கள் நன்கொடைகள் தமிழுக்கான கட்டற்ற வளங்களை உருவாக்கும் செயல்களை சிறந்த வகையில் விரைந்து செய்ய ஊக்குவிக்கும்.

பின்வரும் வங்கிக் கணக்கில் உங்கள் நன்கொடைகளை அனுப்பி, உடனே விவரங்களை kaniyamfoundation@gmail.com க்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

**Kaniyam Foundation**

**Account Number : 606 1010 100 502 79**

**Union Bank Of India**

**West Tambaram, Chennai**

IFSC – UBIN0560618

Account Type : Current Account